1615

உ

ஸ்ரீ ராமஜெயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAR 1928
MADRAS

பாவலர் புகழப்பெற்ற
கயிலாச சுந்தர சுவாமி
என்ற
மு. பொ. தங்கையா
அவர்களியற்றிய

# ஸ்ரீ ராமாமிர்த பக்திரசக் கீர்த்தனங்கள்.

[மூன்றாம்பாகம்]

R. வெங்கடசாமி நாயுடு,
கம்மபாலன் பத்திராதிபர்,
திருத்தங்கல்.

[...ரைட்] 1928. [விலை அணா 6.

...க்கிய அச்சுச் சங்கம் (லிமிட்,)
திருத்தங்கல்.

Q22:417
N28
58971

# பாலன் புக்டிபோ,

## எவை தேவை?

| | ரூ | அ |
|---|---|---|
| ஆங்கில ஆசான் 9-ம்பதிப்பு ... ... ... | 2 | 0 |
| ஆயிரந்தலைவாங்கிய அதிசய சிந்தாமணி ... | 1 | 0 |
| அம்பலவாணன் ... ... ... ... ... | 1 | 4 |
| அமிர்தகுமாரி ... ... ... ... ... | 1 | 4 |
| திருக்கழுக்குன்றத்துக் கொலை .. ... ... | 1 | 8 |
| எமகாதகன் ... ... ... ... ... | 0 | 8 |
| தடிராமன் ... ... ... ... ... | 0 | 6 |
| அங்கயர்க்கண்ணி ... ... ... ... ... | 1 | 12 |
| மாணிக்கவல்லி ... ... ... ... ... | 1 | 0 |
| நவரத்தின ஒப்பாரி. ... ... ... ... | 0 | 5 |
| அண்டப்புழுகன் ... ... ... ... | 0 | 8 |
| கணவனின் கடமை ... ... ... ... | 0 | 4 |
| காதலற்ற கல்யாணம் ... ... ... ... | 0 | 2 |
| தாசி ரகசியம் ... ... ... ... ... | 0 | 1 |

உலகப் பிரசித்தி பெற்ற

## நவீன நாவல்கள்!

### ஸ்ரீ. ஜெ. ரெங்கராஜு காரு எழுதியது.

| | | ரூ | அ |
|---|---|---|---|
| இராஜாம்பாள் ... ... | 22-ம் பதிப்பு | 0 | 12 |
| சந்திர காந்தா ... ... | 13-ம் பதிப்பு | 0 | 12 |
| மோஹன சுந்தரம் ... | 12-ம் பதிப்பு | 0 | 12 |
| ஆனந்த கிருஷ்ணன் ... | 11-ம் பதிப்பு | 0 | 12 |
| இராஜேந்திரன் ... ... | 9-ம் பதிப்பு | 1 | 0 |
| வரதராஜம் [முதல் பாகம்] | 3-ம் பதிப்பு | 1 | 0 |
| டை [இரண்டாம் பாகம்] | 2-ம் பதிப்பு | 1 | 0 |
| விஜயராகவன் ... ... | 2-ம் பதிப்பு | 1 | 0 |

திருத்தங்கல், சிவகாசி S. I. R.

Q22:417
N25

உ

ஸ்ரீராமஜெயம்.



பாவலர் புகழப்பெற்ற,

ஸ்ரீவில்லிபுத்தூர், ஊற்றுமலைச் சுவாமிகள் மடாதிபதியும்,

மேலச்சொரிக்குளம் கிராமம் அகுதாருமான

ஸ்ரீமுத்துச்சாமிப் பாதேசியாரவர்கள் பௌத்திரரும்,

ஸ்ரீ பொன்னுச்சாமி அவர்கள் புத்திரருமான

கயிலாசசுந்தர சுவாமி என்ற

## மு. பொ. தங்கையா அவர்கள்

இயற்றிய,

# ஸ்ரீராமாமிர்த

# பக்திரசக் கீர்த்தனங்கள்.

[மூன்றாம் பாகம்]

58971

R. வெங்கடசாமி நாயுடு,

கம்மபாலன் பத்திராதிபர்,

திருத்தங்கல்.

காபிரைட்.] 1927. [விலை அணா. 6

கம்ம ஐக்கிய அச்சுச்சங்கம் (லிமிட்டெட்) திருத்தங்கல்-27.



உ

ஸ்ரீராமஜெயம்.

# முகவுரை.

ஸ்ரீ அகண்டாகாரச் சச்சிதானந்த பரப்ரம்ம ஸ்வரூப மூர்த்தங்களிற் பற்பல அம்சங்களான, தேவர், மக்கள், விலங்குகள், நீர் வாழ்வன, ஊர்வன, தாவரமென்ற எழ்வகைப்பிறப்பில், அண்டசம், உற்பிசம், சுவேதசம், சராயுசமென நால்வகை ஸ்தானத்தில் தோற்றமாகி, ஜெகத்தின்கண் எண்பத்து நான்கு கோடி ஜீவ ஜெந்துக்களின் ஆன்மஸ்வரூபங்களெல்லாம் இறுதியில் நாமரூபபேத மில்லாத ஏகபரப்ரம்ம மொன்றின் அம்ஸங்களென மறைகள் செவ்வனே நிலவுகின்றன.

தேவர்களாகப் பிறந்தாலும் புண்ணிய முள்ளவரை யின்னுளங்கிருந்து போகபாக்கிய மனுபவித்து, புண்ணியாந்தத்தில் ஞானமடைதற்கு மார்க்கமில்லாது சக்தியற்று, பூவின்கண் மானிடராய்ப் பிறந்துதான் நல்லறிவென்னும் சத்குண போதத்தால் மாசற்ற ஞானமடைய வேண்டும். ஆதலால் மானிடப்பிறவியே நன்றென "இப்பிறவித்தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ" வென்று தாயுமானசுவாமி கூறினர். இத்தகைய சரீரத்தைப் பெற்றாலும் கட் காம கொலை களவு பொய்யென்ற பாதகத்தைநீத்து, எள்ளுக்குள் எண்ணெய்போலும், கரும்பில் ரசம்போலும், பூசத்தில் பூதம் போலும், எங்கும் நிறைந்திருக்கும் தத்வாதீத ஆன்மஸ்வரூபத்தை, தனது சுகுண பேரின்ப சுகத்திஸ்தானத்திற்றானே யுணர்ந்து வந்து பேரின்பத்தையடைவர் ஞானி.

நம் இல்லத்தார்களே வானப்ரஸ்தன், சந்நியாசி, அவதூதியென்னும் ஆச்ரமத்தார்களுக்கும் ஆதாரமாக நிறைந்துள்ளனர். ஷை இல்லத்தார் திரிகரண சுத்தமுற்று, தன்தாரபுருஷ, பரதார சோதரரென விளங்கி இறுதியில் பகவான் திருப்

பாதம் நீங்காவண்ணம் நாளுக்கு நாள் பக்தியென்னும் ஆல்ச் நிறைந்திருக்க வேண்டுவ தவசியம்.

பக்தியடைவதற்கு பற்பல முயற்சிக ளிருப்பினும் முற்காலத்தில் கீதவல்லவர்களான ஆஞ்சநேயர், தும்புரு நாரதர், கெந்தர்வர் முதலியவரும், இக்காலத்தில் சுமார் 500-வருஷங்களுக்குமுன், தியாகராஜஸ்வாமி, முதலியவர்களும் தற்போது இன்னும்மற்றயதொண்டர்களும் சங்கீர்த்தனம் என்னும் பாக்களால் பக்தி மேலாகி ஆனந்த பரவச முற்றிருக்கிறார்களென பெரும்பாலும் அறிஞர் தெரிந்திருக்கலாம். நம் பரதகண்டத்தில் எத்தனையோ வித்வஸ்ரேஷ்ட குளாங்களியற்றிய கீர்த்தனப்பாக்களும் நிலவுகின்றன.

அதில் ஓர் அன்பரான, திருப்புவனம் தாலூகா மேலச் சொரிக்குளம் கிராமமென்னும் குழந்தைமா நகரின் கண் அருதார் முத்துச்சாமிப் பரதேசியாரவர்களுக்கு பௌத்திரரும், பொன்னுச்சாமி அவர்களுக்கு புத்திரருமான ஸ்ரீமான், " கயிலாசசுந்தர சுவாமி என்ற, மு பொ. தங்கையா சுவாமிகள் " பற்பல ராக தாள விசையுள்ள நூதன வர்னமெட்டுகளுடனமைந்த ஸ்ரீ பகவானது பஜனை சிரேஷ்டர்களுக்கும், கேட்பவர்கட்கும் அமுதெனவும் இலக்கண இலக்கிய சொற்சுவை பொருட்சுவையுடனும், பற்பல சந்தக் குழிப்பும் வாய்ந்துள்ள " ஸ்ரீ ராமாமிர்தபக்திரசக் கீர்த்தனங்கள் " என்னும் இம்மூன்றும்பாகம் இயற்றினர். இதனைப்பார்வையிடும் பெருந்தகையார்க்கு வாக்யார்த்த பேரின்பம் செவ்வனேவிழங்குமென இம்மட்டு மெனது சிற்றறிவிற் கெட்டிய வண்ணம் முகவுரை யெழுதலானேன். இதனை அச்சிலிட்டு ஜெகப்ரசித்தி பரவச்செய்யும், R. வேங்கடசாமி நாயுடுகாரு, அவர்கள் ஸ்ரீ பகவானருளால் நீடூழி காலம் வாழ்க.

நூலாசிரியர்க்கன்புள்ள,

யம். முத்துத்தேவர், டெலிகிராபிஸ்ட்,
கவர்ண்மெண்ட் தந்தியாபீஸ்,
தல்லாகுளம், மதுரை,

ஸ்ரீ

# பதிப்புரை.

மானிடராய்ப் பிறத்த லரிதென்று பெரியோரருளியபடி மேலான பிறப்பெய்திய நம் கடமைகளுள், ஈஸ்வரத்தியானம் முதலாவதாம். இக்கொள்கையை அநுசரித்து, அன்பர் ஸ்ரீ மு. பொ. தங்கையா சுவாமி அவர்கள் இயற்றிய கீர்த்தனங்களின் முதலிரண்டு பாகங்களைக்கண்ணுற்ற எமக்கு, இந்நூலாசிரியரவர்களால், "ஸ்ரீராமாமிர்த பக்திரசக்கீர்த்தனங்கள்" இயற்றி நவீன மெட்டுகளில் வெளியிட வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. எமது விருப்பத்திற்கிணங்க நூலாசிரியரவர்கள், தமது மூன்றாவது வெளியீடாக, இலக்கண இலக்கிய வழுக்களின்றி, இக்கீர்த்தனப் பாக்களியற்றி யுதவியதுபற்றி, எமது நன்றியை நூலாசிரியரவர்கட்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

கிராமங்கள் தோறும் பஜனாலயங் களில் பாடஞ் செய்வதற்கேற்றபடி, நவீன முறையிலியற்றய இப்புத்தகம், யாவராலும் ஆதரிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறோம். இவ்வரிய கீர்த்தனப்பாக்களடங்கிய இம்மூன்றும் பாகத்தை, எமது முதலாவது வெளியீடாகமிகவும் சந்தோஷத்துடன் அன்பர்கள்பால் சமர்ப்பிக்கின்றோம். அன்பர்கள் ஆதரவளிப்பார்களாக.

இப்பதிப்பில் தோன்றும் எழுத்துப்பிழை முதலிய வழுக்களை அன்பர்கள் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்று மறுபதிப்பில் சீர்திருத்தத்துடன் வெளியிடுவோம்.

| | |
|---|---|
| கம்ம பாலன் புக்டிபோ, | R. வெங்கடசாமி நாயுடு, |
| திருத்தங்கல், | கம்ம பாலன் பத்திராதிபர், |
| 19-11-27. | பதிப்பாளர். |

# நூலாசிரியருரை.

தமிழில் மிகுந்த பாண்டித்திய முடையனல்லேனுயினும், தமிழ்த்தாய்க்கும், ஈஸ்வரனுக்கும், தொண்டியற்ற கடமைப்பட்டுள்ளேனாதலின், தமிழில்பக்திரசக் கீர்த்தனங்களியற்றி வெளியிடுதலில் என் கடமையின் ஓர் பாகத்தைச் செய்ய லாயினேன்.

முன்னர், யானியற்றிய கீர்த்தனப் பாக்களைக் கண்ணுற்ற நண்பர், ஸ்ரீமான், R. வெங்கடசாமி நாயுடு காரு, தமிழில், தற்கால நவீன மெட்டுகளில், கிராமங்களின் பஜனாலயங்களில் பாடஞ் செய்யத்தக்க முறையில், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதார புருஷர்களின் பேரில் கீர்த்தனங்க ளியற்றித்தால் வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

நண்பரவர்களின் விருப்பப்படி, "ஸ்ரீ ராமாமிர்த பக்திரசக்கீர்த்தனங்கள்" இயற்றிக்கொடுத்து என் கடமையை நிறைவேற்ற லாயினேன். கற்றோரும் மற்றோரும் பிழைபொறுத் தருள்வீராக! பஜனாலயங்கள் தோறும் பாடஞ் செய்யப் பெறுவதே யான் எதிர்பார்க்கும் பிரதியுபகாரமாகும். இதனை வெளியிடும் நண்பரவர்கட் கெமது நன்றியுரித்தாகுக.

அன்பன்,

மேலச்சொரிக்குளம்,
திருப்புவனம்தாலுகா
19-11-27.

கயிலாசசுந்தர சுவாமி
என்ற
மு. போ. தங்கையா சுவாமி.

ஸ்ரீராமஜெயம்.

## இரதபந்தம் வெண்பா.

சீதாவிதா பரமதெய்வ வடிவே சுகுண
தாதார்ந்திடு ராமச்சந்திரா—வாதார
காதாரகநிதா கண்ணுவா பாவலவு
வாதா ரமடவரதா. [1]

## அஷ்டநாகபந்தம் வெண்பா.

நாதா வரதா நகைவடிவே பூதாமா
சீதா புனிதா சிவசுகுண—வாதேன்
ரசவசனு வானு ரமணியநமா கு
நிசவன்ன ரூபா நிதா. [2]

## பதும பந்தம் வெண்பா.

தாசவச மாசகசு தாசரச நேசநிச
தாசலசப்பாதா தகும்வாதா—வாசமொடு
சந்தமலிகின்ற திருத்தங்கல் வளர் நாரணனே
சந்ததமு வநதுனரு டா. [3]

---

## சாற்றுக்கவிகள்

நூலாசிரியரின்தேசிகர், நேற்குப்பை மேஞ்ஞானசரபம்
மு. பைரவ பாரதியவர்கள் வெண்பா.

அன்பரிதய மலராதனத்திருந்து மிக
இன்பமுறச்செய்யுமி ராமன்மிசை—தென்புகழ்சேர்
தங்கையா செப்புந் தமிழமிர்தம் பூதலங்க
ளெங்கும் புகழ் பரவுமே.

சிவகெங்கை சமஸ்தான வித்வான் திருமுகவிலாச வில்லியப்ப பிள்ளை அவர்கள் சகோதரர் பிரமனூர், தெய்வசிகாமணியாபிள்ளை அவர்கள்.

அறுசீர் விருத்தம்.

மங்களஞ்சேர் வளந்திகழுங்கு ழந்தைநகரி ரவிகுலமகிபனுன
துங்கமிகுமால் பொன்னுச்சாமியருட்சுந்தரனுந்தூயபூமன்
தங்கையா கேசவ நாராயணன் மீதுசத்தவிசைக்கியானமோங்கிப்
புங்கமுறையுலகமெலாம் புகழ்பரவப் புகன்றனனும்புனிதமாதோ.

---

நூலாசிரியரின் பிரதம மாணுக்கர் பூ. மு. இராமசாமித்தேவரவர்கள்- வெண்பா.

நாவலர்க்கும் நாடகர்க்கும் நாடுந் தபோதனர்க்கும்
மூவுலகும்போற்று முகுந்தன்மிசை—மாவருள்சேர்
தேசிகனுந் தங்கையா செப்புந்தமிழ் மதுர
வாசகமே சீரமுதம்மா.

---

திருப்பாச்சேத்தி, S. V. S. சுப்ரமணிய பிள்ளை அவர்கள், வெண்பா-

மானந்த மாரிமேன் மாலுடையோனுகிபவ
மானந்தக் கீர்த்தனையை வாசித்தான்—மானந்தஞ்
சேர் குழந்தை மாநகர்வாழ் செய்யபொன்னுச்சாமி
சேர்குழந்தைச் சீர்தங்கையா. [வள்ளல்

ஆலாத்தூர், வே. குப்பையாண்டி அம்பலகாரரவர்கள்

## எழுசீர் விருத்தம்.

அன்னமென்னடையா மின்னெனுமிடையா யயில் விழி கிளிமொழியனையா
யின்னமென்செய்தீர் விரைந்துவந்தாடுமென திரைக் கரங்களா லழைக்கக்
கன்னியர் களபமுலைதனை யசைத்துக் கருதிவந் தோமென வாட
லுன்னித மிலங்கவணிமணி வாவியுறைந்திடுங் குழந்தையா நகரான். [1]

மந்தர மனையபுயமிகும் ஜெயவாண்மதகரி காணு நன்னடையான்,
இந்தரனுலகு பரவிடும்புகழ்வானி ரவியின்மரபுயர் கோமான்
சுந்தரம்பொருந்து மதனினுவடிவன் சுருதிபல்லறிய நுண்ணறிவா
ருந்தியன் பொன்னுசாமியின் சுதனுமுலகெலா மதிக்க வந்துதித்தோன். [2]

தங்கையா சுவாமியெனுந் திருநாமந் தங்கிய பிரபல புனிதன்
மங்களமிகுந்த சிதரன்மீது வகுத்திடுங் கீர்த்தனப் பதங்கேட்
டங்கமுங்குருகிக் குருமுனியெனப் பேரடைந்தனன் விரிவுரையகிலந்
தங்கிய சிரசாயிர முடையவன் மெய்தளர்ந்து நூல றிந்துகந்தனனே. [3]

## ஆலாத்தூர்,

வே. குப்பையாண்டித் தேவரவர்கள்

### அறுசீர் விருத்தம்.

ஆர்த்தனப்பாகங்களை விபீஷணர்க்குதவு மச்சுத ஸ்ரீ
ராமன்மீது
வார்த்தனப்பா லமுதமெனத் தேனறிஞர் பருகிடச்
சீர்தழைமாறாது
யார்த்தனப்பா பதிநிகரும் குழந்தைநகர் தங்கையா
சொற்பன்னலாங்
கீர்த்தனப்பா விசையார்ந்த தும்புரு நாரதர்மகிழ்
வாய்க்கெலியுற்றாரே.

---

திருப்புவனம் உபாத்தியாயர் குரு, நாகலிங்கம் பிள்ளை
அவர்கள் குமாரர் இராஜபார்ட்,

பாலகுருசாமி பிள்ளை அவர்கள்

### அறுசீர் விருத்தம்.

நாமாதோடிருமாது மொருமனதா யிசையருமைநயந்
துகேட்கத்
தேமா பலாகதலி திகழ்குழந்தை நகர்பொன்னுச்
சாமிசேய்நம்
கோமானுமி ரவிகுலத் தங்கையா மங்களஞ்சேர்
சுகுணராம
நாமாநற் பஜனைப்பா நவின்றனனிங் கெவருளமு
நயப்பமாதோ.

ஊறைதக்கிராமம் கர்ணம், திருப்பாச்சேத்தி
S. பொன்னையா பிள்ளையவர்கள்

## எண்சீர் விருத்தம்.

தற்காலத்திற்கேற்ற நாகரீக
சந்தத்தாலீர்சுவையும் பொருந்தக்கேட்போர்
முற்காலத்தாழிதனி லெழுந்த தேவா
முதமெனவே ஸ்ரீ ராம கீர்த்தனத்தை
எக்காலத்தும் புகழத் தமிழாற்சொன்ன
னிரவிகுலன் மாசூழ்ந்த நகராள்வோன்வே
னிற்காலத்தரசுரிமை செய்வேளொப்பான்
நிதிபொருந்துந் தங்கையா நிபுணமன்றோ.

## ஷை யாரவர்கள் வெண்பா.

தேனூறும்வாய்க்குச் செவிக்கமுத மூறுமிரு
நா நாறுபத்திரைக்கு நாணுமனம்—பூஞ
சோலைவளஞ்சூழுஞ் சுந்தரன் தங்கையாபா
மாலைநலமே நலமம்மா.

---

"கம்மபாலன்."
தமிழ் மாதப்பதிப்பு,
பத்திராதிபர்.
R. வெங்கடசாமி நாயுடு.
வருடசந்தா ரூபாய் ஒன்று.
மானேஜர், கம்மபாலன், திருத்தங்கல்.

ஸ்ரீ

ஐக்கிய நாணயச் சங்கங்கள்!
கிராமப் பஞ்சாயத்துகள்!!
பஞ்சாயத்து பாடசாலைகள்!!!
வாசகசாலை புத்தக சாலைகள்!!!!

முதலியவற்றிற்குவேண்டிய
ரப்பர் ஸ்டாம்பு முதலியனவும்,

எல்லாவித புத்தக பாரங்களும்,
தமிழ்ப்புத்தகங்களும்,

கீழ்க்கண்ட புக்டிப்போ
வில்கிடைக்கும்.



உ

ஸ்ரீராமஜெயம்.

புலவர்கள் புகழப்பெற்ற,

மு. பொ. தங்கையா சுவாமி அவர்கள்.

இயற்றிய

ஸ்ரீ ராமாமிர்த

# பக்திரசக் கீர்த்தனங்கள்.

---

[மூன்றாம் பாகம்]

## விநாயகர் பேரில் வெண்பா.

சீர்மேவுஞ் சீதாரன்மேற் றிவ்யபதஞ் செப்புதற்குப்
பார்மேவு வல்லவையின் பாகனே—போர்மா
கஜமுக விநோதா கருணையுடனென்முன்
நிஜமாக வந்தருள் செய் நீ.

2. சரி சரி, மெட்டு

அரிகாம்போதி— ஆதி

பல்லவி.

கணபதி கணபதி காவாமந் த்ராதாஜெய (கண)

அநுபல்லவி.

கங்கை தங்குஞ் சங்கரன்பாலா
துங்கமோங்கு மங்களமூலா (கண)

சரணம்.

குணவிசேஷ மங்குசபாச குலவுமைங்கர போதகா
குறுமுனிகர கமதைக்கவிழ்த்த கோதில்லாதபோதகா
கோமளன் மருகா கொன்றைப்
பூ மலர் முருகார் தொடைக்
குஞ்சரமாமுக ரஞ்சிதப் பாதனே
மஞ்சனுந்தங்கையா நெஞ்சினிறைந்தருள். (கண)

## 3. நாமகள் துதி வெண்பா.

அம்புயல்வண் ணன்பதமீ தன்பெனுங்கி தம்புகல
அம்புயமே தன்னு வமர்ந்தவெள்ளை—அம்புயத்தார்
வாணிகலைப்பாணி வண்ணப் படிகமணிப்
பூணியருள் செய் புகழ்.

## 4. சாந்தமுலேகா, மெட்டு.

சாமா ஆதி.

பல்லவி.

பாரததேவி பாலனென்னுவில்
பக்ஷமதாக வசிப்பாய். (பா)

அநுபல்லவி.

பாரினில் யானுந்தன் பதமறவேனே. (பா)

சரணம்.

கங்கணபூணி தங்கும்யாழ்ப்பாணி
துங்கவெண்பூவில் துலங்குங்கல்யாணி, (பா)
பங்கஜன்பாரி படிகாலங்காரி
தங்கையாகிதம் பொங்கு பூந்தாரி. (பா)

---

## 5. சிவஸ்துதி வெண்பா,

வண்ணத்துளபமணி யாதவனின் பாதமிசை
பண்ணுற்புகலவரம் பாலிப்பாய்—கண்ணுதலே
மலையத்வஜன் குமரிமன்ன கனகச்
சிலை பொற்புயனே சிவா.

---

## 6. அதிலாவண்ய மெட்டு மகுடம்.

கீர்வாணி. ரூபகம்.

பல்லவி.

அருள்சேர்திரு மதுராபுரி
அரசாள்பவனே அனுதினந்தொழுதனன் [அ]

அநுபல்லவி.

திருமால்சகோ தரியாகிய
தேவிமீனம்பிகை மேவுஞ் சொக்கேசனே (அ)

சரணம்.

ஆதியந்தமு நடுவுந்தோன்றி அகிலமாகியே

அனைத்துமுத்தொழில் புரியுமூர்த்தி அமலயோகியே
போதசம்பந்த வடிகள்ஸ்நேகியே
பூசுரர் முனிவரரந்தர
வாசவர் தினகரர்சந்திர
வாசிவ சிவமெனுமந்திர
பூசனை புரிந்திடு சுந்தரா
வாசியின்ஞான நிரந்தர, மாமிகுந்துரைந்திடும் கந்தர
தாசனுகூல புரந்தர, தங்கையாமுன்வரந்தர (அ)

---

## 7. அம்பிகைதுதி. எழுசீர் விருத்தம்.

சுதியோதுநற்கருணை நிறைமாதவற்கினிய
துதியோதிடப் புவிமிசை
மதிவாணதிச்சடில மழுமான் மிருத்தகர
மயமேவு நித்யபரமன்
இதமாமகிழ்ச்சிநிறை வனிதாய் மலர்க்குழலி
னெழிலார் சடைக்கவுரியே
மதுராபுரிக்கரசி விளையாடல் பெற்றசிவ
மயிலே யருட்கிருபையே.

---

## 8. ஸ்ரீராமபாதமா, மெட்டு.

அமுர்தவாகினி—ஆதி.

பல்லவி-

மாமதுராபுரி மாதாதயாபரி
வாவா ஜெயகெவுரி (மா)

அநுபல்லவி.

வாமனின்சோதரி வந்தென்னையாதரி
மா மரகதஸ்வரூப ஸ்யாமளக்ருபாகரி [மா]

சரணம்.

க்ஷேமம்நிறைந்தருள் செல்வக்குமாரியே
திக்குவிஜயஞ் செய்தஜெகம் பிரியே
சோமேசன்பாரியே சுகுணசிங்காரியே
தும்பிமாமுகனையீன்ற அம்பிகாவோங்காரியே. [ ]
தேசுறைமாமணி செழுமலர்த்தாரணி
ஜெகம்புகழ்ராணிவேத காரணி
மாசில்லாவாரணி மகிமைசேர் நாரணி
மைந்தன்தங்கை யாதமிழ்க்கு கந்தபரிபூரணி [மா]

## 9. முருகபிரான் துதி-வெண்பா.

சீலமிகுந் தொண்டர்மனத் தெய்வப்ரசாதவடி
வேலா கயிலை விமலனருட் — பாலாசீர்
புள்ளிமயிலா நின்னைப் போற்றுமன்பனுக்கருள
வள்ளி தெய் வானையுடன் வா.

## 10. ஞானதேசிகா, மெட்டு.

தோடி. ரூபகம்.

பல்லவி.

ஞானபோதகா முருகா (ஞா)

அநுபல்லவி.

தேனுறைந்திடும் செண்பகச்சோலைசூழ்
திகழ்பொதி காசலமாமுனி
மகிழ்வொடு பூஜிதமாகன [ஞா]

மகுடம்.

நந்தார் சிந்தொலிதிருச்
செந்தூர்க் கந்தனே சிவ [ஞா]
நணுமறைமுடி வேதிகழ்சர
வணபவதுரை நீ யருள்புரி [ஞா]
நளின கருணை நயனசுகுண
மொளிருமருண வுதயகிரண [ஞா]
நத்திவரு முத்தமர்கள் சித்தமிசை
நித்தியமுநர்த்தனம கத்துவனே [ஞா]
நானம்புழுகணிகுற மானுங்கனமிகுசுர
மானின்சுவைதமருவுசு கானந்தவசிகரனே [ஞா]
நறுமனதடி யவர் வணிசெய
நரிபரியொடு வர வருளிய [ஞா]
நக்கன் செவிமிசை புக்கவி
ரிக்கு மந்திர பக்குவ
நற்கடவுளே பொற்கஜமுக
னுக்கிளையசு கக்குமரனே [ஞா]

சரணம்.

மாநிலந்தனில் வஞ்சவாழ்க்கையை
மனந்தனில்நம்பி வாடினேன்
மாசில்லாநேசியர் யோகியர் ஞானியர்
மலரடிகளைத் தேடிலேன்
மானேர்விழிமாதர் மையலிற்கூடினேன்
மார்க்கநெறியின்ன தென்றுமேநாடிலேன்
ஆனாலும்நானுன்மேற் கீர்த்தனம்பாடினேன்
அய்யாவேற் கையாபுகழ்
துய்யா தங் கையா தொழும் (ஞா)

11. வந்தாதரித்தருளுவாய் மெட்டு மகுடம்.

மத்யமாவதி. ஆதி.

பல்லவி.

தண்டாயுதங் கொண்ட கந்தா சாஸ்வதசீல
கண்டன் தொண்டு செயுமைந்தா (த)

அநுபல்லவி.

கண்டாமொழி வள்ளிமா வுண்டகனிவாயனே
பண்டாம்ஜென்மவினைக ளண்டாதருள்பழனித்
தலத்தில்வளர் மகத்துவனே
நலத்துதவு ஜெகத் கடவுள் (த)

தண்டமிழ்க்கும்பன் பூஜிதா தங்கையா சுவாமி
பண்கீதங் கொண்ட சேவிதா
மண்டோதரிநாதனைக் கண்டனங்கொண்டிடுங்கோ
தண்டன்மருகவீர கண்டாமணிப்பதனே
சதக்கிருது சுதைப்பிரிய
விதக்கிருபா நிதப்ரபல (த)

சரணம். மகுடம்.

வண்டேனுகர்ந்திட வண்டாடுமிந்துளத்
திண்டாரணிந்தவுத் தண்டவடிவேலா
மண்டலவிண்டலத் தெண்டிசையண்டியே
மூண்டிச்சகஸ்த்ரமெட் டண்டமரசாண்ட
கண்டகச்சண்டாள வண்டவசூரரை
மண்டிவெருண்டேயு ருண்டிடத்தண்டவுங்
கண்டோதும்வேதங்கள் தண்டாமரைப்பதம்
அண்டர்கள் தொண்டர்கள்
கொண்டாடும் பண்டாரத் (த)

---

## 12. அம்பாளென்பால் மெட்டு.

கானடா. சாப்பு.

பல்லவி:

கந்தா வந்தாள்
கதிர்வேல் காக்கடவுள் (கந்)

அநுபல்லவி.

மந்த்ராநந்தா மந்த்ராநந்தா
மயில்வாக யோக ஞானக் [கந்]

சரணம்.

சிந்தோரந் தங்கு கோவில்
செந்தூரில் வாழுந்தேவா சி
செந்தேன் பொங் கார நீ வநிதம்
ஜெபித்தேன் சுப தபஸ்ரேஷ்டக் [கந்]

தேசையரு.

சிங்காரவள்ளி தெய்வானையம்மை
பங்கான திவ்யரூபா
மங்காதவாழ்வு தந்தாணிறைந்த
மலர்ப்பாத சீர்மகிபா

ஷை சரணம்.

கங்காளன் பாலசீல
துங்காமே லானகோல
தங்கையா சுவாமிசங்கிதனே
ஜகத்காரண திகழ்க்ரீடக் [கந்]

---

## 13. மாரவேளினூரவார மெட்டு.

காம்போதி. ரூபகம்.

பல்லவி.

தருணமீது தயவுசெய்வாய்
சரசசண்முகா சரவணபவ [த]

அநுபல்லவி.

திருவுலாவு காதலாகின்
தாசன்தங்கையா சொல் நேசமிருங்கந்தா [த]

சரணம்,

அரஹரசிவ ஜகம்நலமுற
அண்டடபியில்விண் டயனுங்கனிவுற
அண்டர்மண்டலத் தோருங்க்ருபைபெற

அந்தப் பொருளுறை மணியே
கந்தக் கடம்பணி யணியே

ஆதித்ய திகழ்த்தனந்த
ஜோதிமய கனத்தநந்தா

ஆசண சீர்முனிபோதா
பூரண ஞானசமேதா

அற்புத மோகனமுருகா, பொற்புயர் மாதவன்மருகா,
அஞ்சேலென் றருள்புரி திரு
செஞ்சேவல் கொடியாளனே [த]

காஞ்சனைதரும் கன்னிதன்சேயா
கருதுந்தொண்டர்க் கருளுஞ்சகாயா
காஞ்சனநாட் டரசன்சுதை நேயா

கார்த்திகைப்ர சித்திபெற்ற
மூர்த்திவுக்ர சித்தமுற்று

கதித்துவருஞ் சூரர்களை வதைத்த ஜெகத்காரணனே
கானிற்குற மாதுமுனம் மானுக்கதி வேடனென
கருதிச்·சென்றுங் கிழவுரு
பெருகிக் கொண்டும் மயலொடு
கண்டங் கின்பம் பொங்க தண்டுங் கைமுன் தங்க
தாலமீதினிற் கனிந்து வாலவள்ளியைக் கொணர்ந்து
வந்தாரணி இந்தாரெரவி
செந்தூர் வள ருந்துயனே (த)

## 14. ஸ்ரீ ராமர் பேரில், அறுசீர் விருத்தம்.

சீரபயோததி சேஷவிலாச திவாகரனே
தாரபுயாசல கேசவநாத ஜகாதரனே
மாருதிபூஜிதவாச பதாம்புஜ மாவரனே
நேரினில்வந்தருள் கிதமியம்பதி ரந்தரனே.

## 15. ஸ்ரீராமாயண சங்க்ரகம்.

இதர தெய்வமுலனு மெட்டு.
கேதார கௌளம். ரூபகம்.

### பல்லவி.

ராமநாதன் பாதபங்கஜம்
காணும் நம்புவாய்—ரவிகுல,தசரத (ரா)

## அநுபல்லவி.

பாமராதி யர்க்கேட்டாத
பதத்துறை விதத்திஞன்
பரிவொடுஜெக வாத சுகிர்த (ஙஙு)

## சரணம்.

மாயிரு கோசிகன் வேள்வியைக் காத்து
வஞ்சகத்தாடகை மேற்கணை விடுத்து
பூமிசைக்கல்லினைக் கன்னியாயமைத்து
பொறைமிகும் ஜனகன்முன் பரசிவன் சிலைதனைப்
புன்மைய தாகவொடித்துப்
பொன்மணி யையணமுடித்து
புனிதமிகும் பரிரதமிசை
யினிதொடுதல் முங்கவினுற
புண்ணிய நகர்தனை யடைந்து
கெண்ணிய தாயுறை தொடர்ந்து
புத்திமிகுத்திடு லக்குவ மெய்த்திரு வுத்தமிநத்திட
புதாடர் வனவழிநாடி நதிவழி குகனுரவாடி
பொற்சித்திரகூ டபருவ தத்திற்சனஜன மருகிப்
புலம்பிவரு பரதனுக்கு துலங்கு திருவடிகொடுத்து
பூசனை மேவிய கோசலா தேசமனுப்பிய பின்னல
பொருதிட வருங்க ரனுதிய
ருரங்கெட முடிந்தபின் மயலொடு
பொங்கிவருஞ் சூர்ப்பநகை பங்கமுறச் சவுரிபதம்

புக்கவுமேல் வரந்தந்தனு மற்கனுகூல நிறைந்திடு
பக்குவஞானசு காதர ஸமக்கடல் வர்னவசிகர (ரா)

சுக்ரீவன்போற்ற வனுக்ரகஞ்சிறந்து
துந்துபியெலும்பைக்கால் விரலினலெறிந்து
தக்கபலவாலி யையவதை புரிந்து
தஞ்செய மிஞ்சிவிளங்கிய அஞ்சனை தந்திடுமஞ்சனை
சந்துறையாக மயேந்திரங் குந்திநிமிர்ந்தெழு சிந்தினை
தாண்டியிலங்காபுரத்து மீண்டுமசோகவனத்துத்
தங்கியஜானகி கரத்தில் மங்கள வாழிகொடுத்து
தந்திர ராக்கதர்சூக்ஷும மந்திரயோக்யதைலக்ஷணம்
சரிவரத்தெரிந்து நகர்தனை
யெரிபடப்புரிந்து மிருபுயந்
தட்டிக்கதி பெருகிட வர
வட்டக்கடல் மிசை திருவணை
கட்டித்தள முட னிலங்கை
கிட்டித் தொனியொடு புகுந்து
சரணுற வருவிபீஷ ணர்க்கு
சிரஞ்சிவி யெனு வரம்விளக்கி
தர்முள வறநிலை சிறிதெனு
நிரையில்ர் மனதொடு ரதமிசை
தடதடவெனவரு கும்பகர்னன்
திடமட முளதச முகனொடு

தடமலேநிகர் புயவுரவினர்
கொடியினில் மூடியட மடிந்தபின்
தங்கமய மிஞ்சிடுமி லங்கைதனை
துங்கமுயர் மங்கள வரசுகொள
தாசவிபீஷணனுக்கு தேசுயர் மணிமுடிசூட்டி
ஜானகியொடு ராமேசுரம் சேனையுடன்வந்தனை கொள
தகுந்தபரத்து வாச்ரமம் புகுந்து விருந்து நுகர்ந்து
தலைநகர்வர வெதிர்பரதனும்
நலமொடு ஜெய ஜெய ஜெயவென
சந்திர சூரிய ரிந்திர ரந்தரர் சந்தடி மிஞ்சிட
தரணியெலாந் தொழ மனுமுறை
அரசுபுரிந் தருள்தந்தவன்
சங்கையிலா மனதேவுனக் கிங்கிதமிகத்தந்திடுமெழில்
தங்கையா தமிழ்ச் சங்கித
புங்கமிகும் பஞ்சாயுத (ராம)

---

16. ஸ்ரீ ஆண்டாள்பேரில், எழுசீர்ச்சந்த விருத்தம்.

அம்புஜப் பதமலர் துலங்குல க்ஷணபூர்ண
வானந்த மதிவதனியே
வம்பெழிற் கோதைசூ டிக்கொடுத் தாண்டகனி
மன்னூர்மகிழ் வனிதையே
செம்புதுப்பவழவிதழ் தங்குவிற்புருவநுதல்
சிந்துரத் திலதமணியே
இன்பமெய்ப்பனுவல்சொல வந்தெனக்கருள் புரிவை
இங்கிதக் கலாபமணியே.

17 சிக்கந்தர்மலைக்குகை மெட்டு யகுடம்.

பியாகு. ரூபகம்.

பல்லவி.

திக்கெங்கணு மெய்க்கும்வில்லி
புத்தூர் வாழ்தாயே
நற்குந்தள மலர்சூடிக்கொடுத்
தாண்டாள் நீயே (தி)

அநுபல்லவி.

திருமணியணி நுதல்வியே
பெரியாழ்வார் புதல்வியே (தி)
சிறந்தமன்னர் மகிழ்சிங்காரி
நிறைந்தசந்த்ர முகவொய்யாரி (தி)
செப்பிடும்ஞான விப்ரர்கள்வேத
மெய்ப்ரகாச நற்புகழ்போதம் (தி)
திருமக்குளத்தின் தீர்த்தமேலாகும்
திருக்கோபுரத்தின் நேர்த்தியுண்டாகும் (தி)
சித்தர் தேவர் முத்தர் முனிவர்
பக்தர்கோஷ்டி வித்வமிலகும் (தி)
தேடரிய கோடி கோடி பெருமாள்
நாடிவரு மாடிமா தந்திருநாள் (தி)
சித்தம்பர வசமிலகிடும்
நித்தந் தருவுலகிதுவென
சததம் பரவிடுந் தலமிசை
நத்தும் படியுள மகிழ்வுரை (தி)

சரணம்.

சிலப்ரகாசினியே கோலத்தள வாசினியே
திகழ்ரமணிய விர்பனியே
பொற்பினியே மூனம்வந்தருள்
சேயன் தங்கையா நேயசங்கிதம் (தி)

## 18. கெருடஸ்துதி.

முருகனிடஞ் சென்றுபெட்டு.

கமாஸ். ரூபகம்.

பல்லவி.

நவிலுவாய்சீர் ஞானபூங் கெருடா—திரு
நாம மணிநுதல் ராமநாதனிடம் [ந]

அநுபல்லவி.

நலம்பொருந் தலங்கிர்தன
தலந்தனில் நலந்தரும்படி [ந]

சரணம்.

புவிதனிலுந்தன்மாதா தனக்குப்பொன்னகர் தனிலே
திவியமான வமுதகலசம்
சிறந்திடக் கொணர்ந்தவா நிறைந்தவர்க் குகந்தவா
திசைபுகழ்ந்திடுங் கனவிலங்கையில்
புஜபலதச முகன் மகனொடு
செறுக்களத் தரக்கரை ஜெயிக்க லட்மணர்க்குநல்
திருக்காக்ஷி தந்ததுரை அருட்கான மந்த்ரமுறை
சித்திதரும் வித்தகனே உத்தமவி சித்திரனே

தித்திமது ரப்பனுவல் சித்ரகவி வித்வமுயர்
சீலமிருந் தங்கையா
கோலமிருந் தமிழாலே
ஜெபிக்கிறு னெனப்புகழ்ந்
திதத்துட னருள்தரும்படி [ரு]

## 19. ஸ்ரீராம கீதங்கள்.

தசரத ராஜகுமாரா மெட்டு.

இந்துஸ்தான் காப்பி. ஆதி.

பல்லவி.

கவுசலை பயின்றிடும் பாலா மறைமூலா
அனுகூலா சுப சீலா (க)

அநுபல்லவி.

தவகவுசிகன்வேள்வி நிறைவுறமிருத்தாய்
தாடகைமீதினிலோர் பாணத்தைத்தொடுத்தாய்
புவிபுகழ்ஜானகியைத் திருமணந்தரித்தாய்
புண்யசொரூபவலங்காரா திடதீரா
மலர்த்தாரா அருள்தாராய் (க)

கைகேசிவார்த்தையினால் மரவுரிதரித்தே
கனிஷ்டனொடுசீதையும் வனவழியடுத்தே
பொய்கையில் குகன்பா லோடத்தை விடுத்தே
புகழ்சித்ரகூடமதில் வந்தாய் ஆசி தந்தாய்
நேச பந்தா திரு மந்த்ரா (க)

அண்டர்க்கு முனிவர்க்கு மபயஸ்தங்கொடுத்தாய்

அடல்செய்தாரகாசுரனை அமர்செய்துமடித்தாய்
மண்டலத்திற்பட்டாபி ஷேகத்தைமுடித்தாய்
மாருதிஜெபஞ்செய்யும்பாதா குணபோதா
நவநீதா ஜெயந்தாதா (க)

நாமமாணிந்தநுதல் ஸ்யாமளரூபா
ராஜராஜேஸ்வர ராமப்ரதாபா
நேமதாரகமந்த்ர நித்யசுலாபா
நிதமுந்தனைத்தொழுந்தங்கையா தமிழ்த்துய்யா
புகழ்மெய்யா சங்கையா (க)

## 20. பழனிநாதன் மெட்டுமகுடம்.

இந்துஸ்தான் பியாகு, ரூபகம்.

பல்லவி.

ஜனகி நாதன் தகும்வினோதன்
தா தார்பூஞ் சீர்பத (ஜ)

அநுபல்லவி

சந்தப் பேரொளிபொங்கும்
கந்தப் பாதம் விளங்கும் (ஜ)
ஜலந்தரன் கனிமருவிய
அலங்கிருதன் றணிரமணிய (ஜ)
சரியை கிரியை யோகஞான
வரதகடவு ளானமோன (ஜ)
தங்குரான முஞ்சிறந்த
குங்குமங்க ளிந்தணிந்த (ஜ)

தலபீதினி லடியார்மன
மலர்மேனிதங் குடியாகிய (ஜ)
தண்சோடச கலைவிரிவுள
சந்த்ரோதய நிலைமுகமுள (ஜ)
தசக்கிரீ வனைக்கண்ணத்
தினிற்றுணித் திடும்ப்ரபல (ஜ)
சக்கரசங்குடன் கட்கமுங்கோதண்ட
விற்கதநற்கர வுக்ரமகேசவ (ஜ)
சார்ந்திடுஞ் சத்ருசித்தாந் ந்தமிலங்கும்
தேர்ந்திடும் பத்திக்குத்தாய் வஸ்தெனவோங்கும் (ஜ)

சரணம்.

சாலோக சாமீப சாரூப சாயுச்யம்
தந்திடுங்கெம்பீரன் சிங்காரந்
தந்திடுங்கெம்பீரன் புகழ்
தங்கையாசுவாமியின் சங்கிதமாமலர்
தங்கும்புயத்தாரன் பீதாம்பரந்
தங்கும்புயத்தாரன் (ஜ)

## 21. கூடுஞ்சுதேசியர் மெட்டு.

கீர்வாணி. ரூபகம்.

கண்ணிகள்.

சாஸ்வதயோகநி தானசமரச
சாகரமெய்ப்பொருளே திகழ்
சாஸ்திரபூரண தாரகஸ்ரீராம
சந்திரா வந்தருளே (சா)

செந்திருதங்கிய மார்பலங்காரனே
தேசோ மயாநந்தனே உந்தன்
செந்தாமரைப்பதம் சிந்தைதனில்நிதம்
சிந்தனை செய்தனனே (சா)

செம்பவழவிதழ் முந்நூலணிபவ
ஜீவத யாபரனே சதா
நம்பிடுமன்பர்கட் கின்பமிகத்தரும்
நாதக்ரு பாகரனே (சா)

பாற்கடல்மீதினில் ருக்மணிமாதொடு
பன்னக தற்சயனு ஞான
பாக்யவிசேஷனே தங்கையாசுவாமியின்
பண்சலச நயனு (சா)

## 22. மதுரகான சரசராணிமெட்டு.

கல்யாணி. ஏகம்.

### பல்லவி.

கருணைஞான சுகுணபூமா
கடவுளான மகிபராமா (க)

### அநுபல்லவி.

தருணமீது வாதநீத
சாயிநாதா நேமபோத (க)

### சரணம்,

அருளும்ஜோதி ஆதிமூல
அமலயோக தவனுகூல
குருபராம குடவிசால
கோதில்லாத மந்த்ரசீல

தருமபுனித ரமணவனக
சதுர்மறைதனி னடனமிலகு
சரசாசல சனகனமிகு
சௌகல்யாணி ரமணசுகிர்த

சம்பத்தணி கீர்த்தி
தந்துலவு மூர்த்தி
தன்பனுவ னேர்த்தி
தங்கையுமாசொற் கீர்த்தி (க)

---

23. அடுக்கு மல்லிகை மெட்டு.

செஞ்சுருட்டி. ஆதி.

கண்ணிகள்

திருத்தங்கல்தனி லிருக்கும் நாரணனே
சித்தானந்தயனத்
தியான மிஞ்சிய வேத காரணனே
நின் சீத பங்கயப் பாதந் தந்தருள்
கோதையாந் திரு மாது தங்கிடுந் (தி)

தொகையரு

ஜெயமிகுந்த பாவாணர் கொண்டாட்டந் தாசாங்கத்
திருக்கூட்டந் தேவர் நாட்டம்
வயிணவர்களார்ப்பாட்டம் வடகலை தென்கலை மருவு
மறையவர்களை வேதேஷ்டம்

ஷடிகண்ணிகள்

வந்து வந்தர்ச்சனை விந்தையுடன் புரிவார்
சட்காலந்தோறும்

வாசமலர்ப் பிர சாதமதைப் பெறுவார்
மா வாழை கமுகுயர் வான் மருவம்பொழில்
சூழும் நிலவள நீர்வள மோங்கிடுந் (தி)

தொகையரு

தேவா வுன் தெரிசனைக் காக்ஷி கண்டோர்க்கதிக
ஜென்ம சாபல்யமாமே
பாவ வஞ்ஞானமெனும் வினையெலாங் காற்றின் முன்
பஞ்சு போற் பறந்து போமே

ஷேகண்ணிகள்

படர் கதிர்மணி மகுட ரஞ்சிதனே
கனகாம்பர வுடை
பகர் திரு மணி நூத லலங்க்ருதனே
இந்தப் பார் புகழ்ந்திடுந் தாசன் தங்கையா
சீர்மிகுந் தமிழ் தேசுறைந்திடுந் (தி)

---

24. வருத்துவதழகோ மெட்டு.

தந்யாசி ஆதி

பல்லவி.

வரந்தா வின்னும் வர்மமா
மா தவ பூமா [வ]

அநுபல்லவி.

பொருந்தும் ருக்மணி மன்னா
போத சுக விற்பன்னா எந்தன்
புந்திதனி லுன்னைப் போற்றிடயின்னா [வ]

புரந்தரன் பணி பதா
பூத தத்துவா தீதா மனப்
பூரண கோபால கிருஷ்ணனே சதா [வ]

நிரந்தர சொருபனே
நிக்ஷய மகிபனே ஜெக
நீதி மயமான பிர தாபனே [வ]

தரும த யாபரனே
தாம வ சிகரனே தாசன்
தங்கையா பனுவற் கலங்காரனே [வ]

---

25. ரகுராமா ஜெயபூமா மெட்டு [வேறு]

ஆரபி ஆதி

பல்லவி.

ரகு நாதா அருள் தாதா (ரகு)

அநுபல்லவி

நாத விந்து மய மா நிறைந்த ஜெக
பூத பந்த சொரு பாதி யந்த ரகு (நா)

சரணம்.

நாடும் யோகியர்கள் தேடு பாதமலர்
நாய காசுகுண போதா
தினம் நம்பினே னமித நீதா
திரு ராதை மங்கள சமேதா
கமழ் நான மிஞ்சு திரு நாம சுந்தரநி
தான ரஞ்சிதனே நேமமந்த்ர ரகு (நா)

நாக ராஜ ஸய ஹ்ருதயா புனித
ராகவா கருணைக் கண்ணா
அருள்ஞானம் பெய்யுமுகில்வண்ணா
மலர் நங்கை மார்பனே விற்பன்னா
எழில் நாரணா வரத காரணா வனக
ராஜ ராஜ வழி ராமச்சந்த்ர ரகு (நா)

நாத சங்கணிக ரா இடம்புய ச
லாப வன்ப ரக வாசா
உந்தன் நண்பன் தங்கையா விலாசா
பத்மநாப கேசவ விஸ்வாசா
ஜெக நடன மோகினியின் வடிவமானுபவ
கடவுண் மாதவனேபடிபுரந்த ரகு (நா)

---

## 26. சித்தானந்தா சுகா மெட்டு [மகுடம்]

இந்துஸ்தான் பியாகு ஆதி

பல்லவி.

அத்வீதந்தா சுகா மெய்யருட் பொங்கும் ராமச்சந்த்ரா
அடியார்க் கருள் சுதந்த்ரா
அட்டாக்ஷரஞ் சேர் மந்த்ரா (அ)

அநுபல்லவி.

அனு தின முனை தடி பணிந்தனன் (அ)
அகலிகை சாப மகல் விமோசனா (அ)
ஆரண மோதிடுங் காரண வஸ்துவே (அ)
அந்த ப்ரமன் வளா ருந்திக் கடவுளே (அ)
அத்திக் கருளிய உத்தம விற்பனா (அ)

அற்புத ருக்மணி சொக்கிடும் லோலா
பொற்பத லக்ஷண பக்குவ சீலா (அ)

அஞ்சன ரஞ்சன மிஞ்சிய தேசா
அஞ்சனை மஞ்சனி ரஞ்சும் விலாசா (அ)

ஆணிப்பொன் அம்பரமணி
அம்பரவணி
அம்பல வணி
அம்புயபதமணி (அ)

தொகையரு

அணி கொண்ட திகழ் மகுட சுந்தரா கோதண்ட
மடல் கொண்டு ஜெய முற்றவா
மணிகொண்டுக்ஷீரப்தி பள்ளிகொண்டாண்டவ
பரந்தாம துரை நற்றவா

ஷைபாட்டு

அபய வரத கர சுகிர்தனே
ஜெப தபசியர் பணி புனிதனே
அன்பன் தங்கையா சொலின்பதத்திற்
கின்பம் பொங்கும் ஸ்ரீரங்க கர்த்தா (அ)

---

27. சூழ்ந்து சர்க்கா மெட்டு

செஞ்சுருட்டி. ஆதி

கண்ணிகள்.

ஆதி மத்தி யாந்தத்தில்
அலர்ந்த சிவ ஜோதி
காத சத்தி யாற்சிருஷ்டி
ஞால சராசர ராம் ராம் ராம் ராம் [ஆ]

தொகையறு

பூத முதற் றத்துவங்கள் தொண்ணூற்றாறும்
புணர்ந்ததொரு சடத்துள்ளோர் வஸ்துவாக
நீத மாயிருந்து மன மாயா பந்த
நிக்ஷயப் போற் றிருவிளையாட் டெல்லாஞ் செய்து
போதமிலா விருள் மூடிப் பிறவி தோறும்
புலம்பியபின் தேசிகன் பக்குவ மடைந்து
சாதனையா லஷ்டாங்க யோக முற்றித்
தனித்திலங்கும் ஞானி யிருதயத்தினுள்ளே

ஷைகண்ணி

ஆனந்தத் தேனூட்டியே
அமர்ந்த நவ நீதா
கானமுற்ற தங்கையா சொல்
கவின்மல ரணிபுய ராம் ராம் ராம் ராம் [ஆ]

---

28 காக்ஷி கண்காக்ஷியே யெட்டு மகுடம்.

ஹரிகாம்போதி ஆதி

பல்லவி.

பார்த்தா லானந்தமே பார்த்தசாரதி தனைப் [பா]

அநுபல்லவி.

பனித்த முகில் வனப் பிலகு தரிசனம் [பா]
பதங் குணங் தருங் கடவுளடி [பா]
பட வர விட முடி நடமிடு வரதனைப் [பா]
படருந் தொடரும் பவ மங்கிடவே
திடமுங் கனமும் ஜெயம் வந்திடவே [பா]

பக்தித் தமிழிசை பார்த்துத் தயவருள்
முக்திக் கனிகல மூர்த்திப் பிரபலம் [பா]

பண்டு வெருண்டிடு மண்டர்களுந் தொழ
வண்ட விராவண கண்ட கோதண்டனைப் [பா]

பாத்தி னிகர்த்த திரத்தை வகித்து
வரத்தின் மிகுத்த வுரத்த மகத்துவம் [பா]

பதுமத் திருமலர் வதனச் சனகியி
னிதயக் கனி யுறை மதனத் துரை தனைப் [பா]

கீர்த்திமிகுந் தேவமாதர் சிந்தை மெய்க்கு மேடைகள்
தேசுயர்ந்த வாச விளந் தென்றலெனும் வாடைகள்
ஆர்த்துவருஞ் சங்கினங்கள் பொங்குமணி யோடைகள்
அற்புத நவமணிக ளால மைத்த மாடிகள்

அந்தணர்கள் சந்த மறை வேதம்
சொல விந்தை பெறும் ஸ்ரீரங்க விநோதம்
அஷ்ட மந்த்ர ஜெப மிஞ்சிய ப்ரசாதம்

வாடிதனை நாடி
வருபவர்கள் கோடி
சாத மனங் கூடி
தங்கையாசங்கீதம்பாடிப் (பா)

---

## 29. பவணகிரி மெட்டு.

மால்கோஷ் ஆதி

பல்லவி

ராமச்சந்திர சேஷ ஸயன
நாதா சீ தா சமேத (ரா)

அநுபல்லவி

பூமெச்சுஞ் சிங் காரலோல
புண்யா கா
ருண்யா லா
வண்யா கெண்யா ரவிகுல (ரா)

தொகையரு

வாயியின் சோதரா மந்திர தயாபரா
வாமுதவு மாதி மூலா
பாமருவு மன்ப ரகவாசகா வஞ்ஞான
பதிதபாவன விசாலா

சரணம்

பாரினில் ராவணனை நேரில் ஜெயித்தவனே
பக்ஷம் வைத்திடுஞ் சங்கையா
லக்ஷணத் தமிழ்த் தங்கையா
பண் மலரணி சுந்தரானந்தனே
நண்ணினேன் முகுந்தனே வந்தருள் (ரா)

---

30. சம்போ சதாசிவ- மெட்டு

தேசிக தோடி ஆதி

பல்லவி.

சிதானந்த ஞான தேவா வா வா (சி)

அநுபல்லவி-

ஆதார முன்னையன்றி அகிலந்தனில் வேறுண்டோ
தீதான ராக்கதரின் சிரமறுபட விரைவினில் முன
மொருகணை விடுகரதல வரத (சி)

தொகையறா

செங்கருடன் மீதிலுலா சீலா விநோதனே
திவ்ய சுப வர முதவுவாய்
புங்க மணிவண்ணனே பீதாம்பரா கருணை
போதகா வாழ்வு தருவாய்

ஷீபாட்டு

தங்கையா சுவாமி தமிழ் சங்கீத கோலாகலா
சங்க்ரமஞான சீத தாமரைப் பதனே யருள் தருங்
கோமளப்புனி தா கலம் புகழ்
வாமனத் துரையே கனிவுள
பூமகத்துவ கோசலை சுதனே (சீ)

---

31. தயவில்லையா— மெட்டு.

தேசிகதோடி ரூபகம்

பல்லவி.

அருள் தருவாய் அய்யனே ஸ்ரீராமா வுன் (அ)

அநுபல்லவி.

ஆவலாய் நானே தினந்தானே நினைந்தேன்
வருவாய் (அ)

சரணம்.

அன்பர்க் கழு தினையுதவிடு
மின்பக்கடலே கனிவுடன் (அ)
அமலோற்பல மணிவண்ணனே
கமலக்கருணைக் கண்ணனே (அ)

ஆதரவாகிய நீதனே
போத விசேடவி நோதனே (அ)

அனக மிதிலை ஜனகன் மருகா
அண்டர்க்கும் முனிவரர் முதல்
தொண்டர்க்கும் நயமுதவு கோ
தண்டப் பிரபல சுமுகனே (அ)

சரணம்.

செய்ய கருடது ரங்கா
தேடித் தேடிப் பதம்
பாடிப் பாடிக் கும்பிட்டேனரங்கா
சீர்த்தி யுற்ற நண்பருக்கு
பூர்த்தியாய் செல்வங் கொடுத்தவா
ஜெயமுள தசரதனருளிய
வயமுளபுஜபல ரமணியனே
சிங்கார மிலங்கும் புங்கா
தென் குழந்தாபுரி வித்வச்சீர்
அமுதென விளங்கிடும்
தங்கையா சுவாமி பதத்துக்கே
அருள் மனதுகந்தவா
மங்களமான கவுத்வத்தார்
மணியணிவரதனே (அ)

---

32. ஜெகநாதா வந்தாள் மெட்டு.

தேசிக தோடி. ஆதி.

பல்லவி.

ஜெய ராமா வா வா திருநாமா மூவா
யான் சேவை செய்ய ஜெய (ரா)

அநுபல்லவி.

லீலா விநோதா செழுமலர்ப்பாதா
கீர்த்தி யுதவும் நாதா ஞான போதா
இன்னும் வாதா [ஜெ]

தொகையறு

இகழ் மிதிலை ஜனகன் முன் சிவன் தனுசொடித்தாமே
திருமாதை மணமுடித்தாய்
ஜெகமீது புகழோங்க ராவணன் தசமகுடஞ்
சிதைபடக் கணை தொடுத்தாய்

ஷைபாட்டு சரணம்.

திருவரங்கராமா வரமிகுங் கோமா
சிங்காரனே குணபூமா பரந்தாமா துரைநேமா
வுயர் சிஷ்டர்களின் பரிபாலா
இஷ்ட சித்தி யுதவிடுஞ் சீலா
திகழ் திவ்ய மணிவண லோலா புகழ்
தென் குழந்தாபுரி தங்கையா சுவாமியின்
செந்தமிழ்க் கந்த மலரணியும் (ஜெ)

---

## 33. செந்தூரிலே மயிலாடுது மெட்டு.

ஹம்ஸத்தொனி. ஏகம்.

பல்லவி.

ஸ்ரீராமன் பாதமே நாடுவாய்
சேவை செய்தே புகழ் தேடுவாய் (ஸ்ரீ)

அநுபல்லவி.

ஸ்ரீரங்கன் கார் பொங்கும் தேகன்
திருமகளணி பாகன் ஜெயமிகு வாகன்
திகழ்ச் சனகி மகிழ்ச்சி பெறு மகத்துவ (ஸ்ரீ)

சரணம்.

செம்பொன் றங்குங்கஞ் சந்தார்
இன்பம் பொங்கு மெங்கும் பேர்
சித்தியரு ளுத்தமனின் மெய்த்தவமே நத்திடுவாய்
தென் குழந்தாபுரி தங்கையா சுவாமியின்
செழுந்தமிழ்க் கனுதினமே மிகுங்கனமே
மகிழ்ந்துதவும் (ஸ்ரீ)

---

34. செந்தாமரைப் பதந்தா மெட்டு.

இந்துஸ்தான் தோடி. ஆதி.

சிங்கார நற் கோவிந்த ஸ்ரீ ராமா களப
சிந்தூரந்தி கழ்ந்த நுதல் சேர் பூமா (சி)

அநுபல்லவி.

பங்கேறு கன்றன் ரூதா
பஞ்ச பாண்டவர் தூதா
பணிலமலிப் பரம திருப்
பதியின் மலைப் பதிவ்ரதச் (சி)

தொகையரு

கங்கணச் செங்கை திகழ் நங்கை ஜானகி தனைக்
கடிமணஞ் செய்த நாதா
பங்கஜக் கருணை மலர் பொங்கி நற் கிருபை புரி
பாத பாதுகை பூஜிதா

ஷைபாட்டு

பற்பல சுபகர ஜெய பிரபல ஜூணை
அற்புத முகினிற மயமிகு சுப கர
அருள் சந்தப் பொருடங்கிப்
புகழ் சங்கத் தொனி ரங்கச் (சி)

தொகையரு

மருளெனு மிருணீக்கு மெஞ்ஞான ஜோதியே
மவுன ரக மேவு கோவே
குருவாகி வேடனுக் குபதேச முறை செய்த
குலவு ஜெககாத தேவே

ஷைபாட்டு

குளிர்ந்த பிருந்தை யணிந்த ரஞ்சித
குழந்தை நகர் தங் கையா சங்கித
குகனன் பொடு பணியுஞ் சற்
குண குஞ்சர கஜமுகன் பொற் (சி)

35. ப்யாண்ட் மெட்டு

தேசிக தோடி. ரூபகம்.

பல்லவி.

நம்பிக்கை கொண்டேனருள் நாரணா
நான் மறை போற்றும் பரிபூரணா (ந)

அநுபல்லவி.

நந்து சக்கரக் கையா மைந்தனுள்ளந் தங்கையா
நாத விநோதன் நீதவ நாத குணநிதி யேவுனை
நாடிப்பண் பாடிக்கொண்டாடிக்கும் பிட்டனுதினம் [ந]

சரணம்.

அன்பர்க் கிரங்கிப் பொங் கின்பச் சுகந்தந்த
செம்பொற் பதந் தருவாய் ஜெய
நண்பர்க் கருள் புரிவாய் ஜெயஸ்
தம்பத் துரை வருவாய் மா

தீதணிகல காதக வெம்
பாதக வவு ணரியரின்

திரம் பெறுஞ் சிரமறுபட
வரம்பெறு மொருகணை விடு

சித்தத்திடம் வைத்துப்ாயோ
இத்தப் பரி சுத்தப் புகழ்
தித்திக்கும் புதமுதமே
வித்வத்தின் மதுரிதமே

திரு வுகந்து திரு நிறைந்த
தெரு மிகுந்த திருவரங்க

ஸ்ரீராம ராம ராம
பேரார் சகஸ்த்ர நாம

திகழ் மதியெனும் வதன ஜனகி
மகிழ் ரமணிய புனித வனக

செங்கதிரோன் தன் குலமணி
தங்கையாவின் சங்கித மன (ந)

36. மதினமே மோரே மெட்டு.

அமீர் கல்யாணி ஆதி

பல்லவி.

நாரணப்ர தாப நாம ராமநாதனே
சீதா ராமநாதனே சீதா ராமநாதனே
சீதா ராமநாதனே (நா)

அநுபல்லவி.

களிவ சிங்காரா நறுமலர்த்தாரா (நா)

தொகையரு

ஞான சின்மய ரூப மோன மந்த்ராதரா
நாயகா போற்றி போற்றி
தீன பரி பாலகுண தேசோமயானந்த
தேவனே போற்றி போற்றி

ஷீபாட்டு [முடுகு]

தினமுன திணையடி மனமிசை மறவேன்
கனவிலு மகிழ்வொடு தனிநில் பெறுவேன்

அநுபல்லவி யெடுப்பு

சேயன் தங்கையா நேய சங்கையா (நா)

---

37. கடம்ப கந்தன் மெட்டு மகுடம்

செஞ்சுருட்டி ஆதி

பல்லவி.

திருப்பாட்டுத் தமிழுரை யன்பர்
மனக்கோட்டி நீங்கிட வோங்கும்
திருக்கோஷ்டி யூர்வளர் மாதவனே
சவுமிய நாரண [திருக்]

## அநுபல்லவி

தெருக்கண் மிக வலங்காரம்
தருக்கள் சூழ் சிங்காரத் [திருக்]

சீதா நாதா ஜெகாதர பூரண
போல குண நிதி வேத பாராயண [திருக்]
சிங்கார செங்கருடதுரங்கா
மங்காத வாழ்வு தரு மரங்கா [திருக்]
செப் பரிதான வப்பிணி விலக்குந்
தெப்பக்குள ஜல வற்புதமான (திருக்)
ஜெய ஜெய ஜெயவென வாத்யமுளங்க
நயமிகுங் கணிகையர் நர்த்தனந்துலங்குந் (திருக்)
திகழ்க் கோபுர மணிக்கலசம் விண்
முகட்டே நிறை மகத்துவ மிஞ்சும் (திருக்)
திருமகள் நிலமகள் கோதைநாயகி
மருவு சமேதனே வேதியர் வாழும் (திருக்)
தீதில்லாமலே மாத மூன்று மழை
நீதமாகப் பெய்தேப் போதுஞ் செந்நெல் விளை (திருக்)
தினமுன் திணையடி கனவிலும் நினைவுற
மனமினி துட னருள் கனமணிவண்ணனே (திருக்)

## சரணம்.

விருப்புடன் பிருந்தாவன மணித்தாரா
விமல வட்டாக்ஷர மந்திர தீர
திருக்கரு ணாகர சுதந்திர வீரா
சேயன் தங்கையா சங்கீதாகாரத் [திருப்]

## 38. பாரினிலேபுகழ் பாரத-மெட்டு வேறு.

செஞ்சுருட்டி. ஆதி.

பல்லவி.

பொன்னரங்காபுரி மன்னும்புரந்தரனே—ஞான
போத மந்திரனே (பொ)

அநுபல்லவி.

நன்னயமோங்கும் வேதபாராயண
மன்னன்தசரத பாலநாராயண (பொ)

சரணம்.

அன்னையாங்கைகேசி வார்த்தையைக்கேட்டு
அன்புள்ளதம்பியுஞ் சீதையுங்கூட்டி.
மன்னும்பதினாலு வருடங்காட்டில்
மருவுராக்கதர் சிரத்தையறுத்து
பரதநாட்டினை மகுடந்தரித்து (பொ)

தொகையறு.

புவிமீதிலுந்தனிரு பாதாரவிந்தமலர்
போற்றிடக் கிருபைபுரிவாய்
நவநீதவமுதுண்ட குமுதவாய்ரமணனே
நற்கருடன் மீதுவருவாய்

ஷை சரணம்.

நங்கையலர்மேலு தங்கிடும்நேசா
தங்கையாசுவாமிசன் கீதப்ரகாசா
துங்கமிருந்த சுமுகவுலாசா.
துலங்குங்காவிரி சூழமருங்கினி
விலங்குங்கோபுர வாசல்விளங்கிய (பொ)

39. ஆதாரமெனக்கார்-மெட்டு.

ஆநந்தபைரவி. ஆதி.

பல்லவி.

ஸ்ரீ தேவகிசுதா திகழுமத்விதா
சீர்நவநீதா செந் திருமகழ்ரமணீய (ஸ்ரீ)

அநுபல்லவி.

சீதாமலர்ப்பாதா தியானம்செய்தேன் (ஸ்ரீ)

தேவா ப்ரபல சீலா மூலா ஜெகபரி
பாலா லோலா கனமய (ஸ்ரீ)

சரணம்.

தீரமேவு யோகமாத வாவன
தாரபார கோலநார ஹபர
தாரமீதி லாசையேகி டாவணம்
நேரிலோஜ தேசிகா சுகோதய

தீபா லாபா ஸ்யாமள
ரூபா மாபா வாணர்கள்

சிந்தைதங்கி யன்புகொண்டு சந்ததம்
வந்திதம்பு ரிந்தவிஞ்சை மந்திர
சுந்தரஞ்சி றந்ததென்கு ழந்தைதம
கிழ்ந்துறைந்த தங்கையாவின் சங்கித (ஸ்ரீ)

40. கெண்யமுள்ள மாதர்-மெட்டு.

அஷ்டலக்ஷி மிருக்மணி ராதா வுயர்
அழகுள்ள சத்யபாமா சீதா — எழில்
இஷ்டகோபி காஸ்திரிகள்ச மேதா எனக்
கின்பமான சுகந் தாதா [அஷ்]

ஸ்யாமள வர்ணமணி ரூபா திகழ்
தங்கு மணிமகுட தீபா இஷ்ட
பாமரர் தங்களுக்க ரூபா மனப்
பக்ஷமான பிர தாபா [அஷ்]

பஞ்சாயு தக்கரவி லாசா ஞான
பானுவான பிர காசா உனைத்
தஞ்சமென் றேன்ஜெக தீசா அருள்
தக்குமானசவுள் வாசா [அஷ்]

வாசனை சேர் துளபத் தாரா கவுத்
வாபர ணங்கவின்சிங் காரா திருப்
பாசுர சங்கிதார பாரா வேத
பஜனைக் கோஷ்டிக்கலங் காரா [அஷ்]

தருவென வருள்ஜெய கீர்த்தி நிரை
சத்துச்சித் தானந்த மூர்த்தி சுப
கருணைகடாக்ஷமிகும் பூர்த்தி யான
காக்ஷிகிடைத்தாலல்லோ நேர்த்தி [அஷ்]

கண்கண்ட தெய்வமுன்னைப் போலே யிந்த
காசினியி லுண்டோமென் மேலே தமிழ்ப்
பண்கொண்ட தங்கையாநின் பாலே கீதம்
பாடினே னருளிக் காலே [அஷ்]

## 41. திருமிகுங்காந்தி-மெட்டு-வேறு.

செஞ்சுருட்டி. ஆதி.

கண்ணிகள்.

ஜெயமிகும் ஜானகிமணவாளன்
ஸ்ரீ ராமன் (ஜெய)

சிறந்து லாவிய கருடதுரங்கன்
நிறைந்த காவிரி சூழுமரங்கன் (ஜெய)

தொகையறு.

திருநாமநெற்றியு மருள்மலர்க் கண்களும்
திவ்யமுகிலார்ந்த மெய்யன்
சரதவித வபயவர தபரபல சிங்கார
சங்குசக்கரஞ்சேர் கையன்

ஷ கண்ணி.

தாசர்கண் மனமிசை யாசனபரந்தாமன்
ஸ்ரீ ராமன் (தாசர்)

தனிப் பரம்பொரு ளானவிசாலன்
வனப்பு மிஞ்சிய மாமறைமூலன் (ஜெய)

தொகையறு.

கிட்கிந்தைக் கரசனும் வாலியைக் கொன்றுநற்
கீர்த்திபெற் றிடுமுதாரன்
சுக்ஞான மந்திரச் சுடர்மேவு சுந்தரன்
சுகந்தபொற் றுளபத்தாரன்

ஷகண்ணி.

தூயமிருந்தங் கையாபணிபூமன்
ஸ்ரீ ராமன் (தூய)

சுடாவ னுறகுல தசரத பாலன்
கடகரி முறையினுக் கருளிய சீலன் (ஜெய)

---

42. கோபாலசோ-மெட்டு.

பைரவி. ஆதி.

பல்லவி.

சீதாசமே தாசோபிதா (சீதா)

அநுபல்லவி.

பக்த ராதார போதாவத் வீதாங்கிதா
வரமருள்புரி
வேதா ஜெயவரதவித மகிபா ஸ்திர
விரதவை ராக்யமா மேலாங்கன (சீதா)

சரணம்.

பீதாம் பரக்கரு ப்ரபல்யகைவல்யமே
தாதாம்புயப்பதவி நோதாவருட்சேவமே
மாதாபிதா நாதாசதா எங்கும்
நீதானென் றேதுந் தமிழ்த்தக்கையா
கிதமணிபுய (சீதா)

---

43. சா தரமுககுகா-மெட்டு.

தோடி. ஆதி.

பல்லவி.

ரா கவாவிகுல ராஜப்ரபு (ரா)

அநுபல்லவி.

பாகவதர்பஜனை வுஜிதமாய்ப் (பா)
பாடி மகிழ்வுடன் கொண்
டாடிப் பூசைபுரி (ரா)

சரணம்.

மா கனபுனிதமா ஸ்ருதிபுனைமா
சலசப்பத மா மந்த்ரஜெப மா
தா கனிந்துறை பிதா குருதெய்வநி (தா)
தான வே தாந்த நித தங்கையாவின் சங்கித (ரா)

---

## 44. ஏனோ எனையெழுப்ப-மெட்டு.

ஆனந்தபைரவி. ஆதி.

கண்ணிகள்.

வாசு தேவ தேவகி மாது தந்த பாலா
மாக்ஷிமைசேர் காக்ஷிதரும் தீக்ஷண்யவிசாலா (வா)
மாசில்லா ஆயர்பாடி மாநகரில் தானே
மங்கை யசோதை மடிமேல் வளர்ந்த செந்தேனே (வா)

தொகையறு.

கொந்தார் பிருந்தாவனத்தே யுறைந்தாய்
சிந்தாத நாம நுதல் கொண்டே நிறைந்தாய்

ஷை பாட்டு.

கோபியர் மா மனையில் மா மகிழ்வதாக
கோல விளையாடல் செய்த சீலானு போகா (வா)
பூவெலாங் காத்துதவும் பொற்கனக பாத்ரா
பொறி புலன்களை வசக்கும் போதார்மன க்ஷேத்ரா (வா)

தொகையறு.

மஞ்சார்ந்திடும் பச்சை மணிவர்ன ரூபா
பஞ்சாயுத க்ருஷ்ண பரமாத்ம தீபா

ஷிபாட்டு.

மங்காத வாழ்வுதரும் ஜாகன ப்ரக்யாதாபா
வஞ்சகக் கஞ்சனுயிர் மடித்த மகிபா (வா)
சங்கீத வேணுகானந் தங்கு மானுபாவா
தங்கையாசுவாமி தமிழ்சாற்றினேன் வாவா (வா)

---

45. சந்த்ரோதய வதனதள-மெட்டு.

மத்யமாவதி. ஆதி.

பல்லவி.

மந்த்ரா வரத மணிரவிகுல ரகுராமா பர
வச நிலை மருவிய தசரதனருளிய [மந்]

அநுபல்லவி.

அந்தரங்கந் தெரிந்த நாரத யோகி
அதிசயஞ் சொலவதி விரைவுடனேகி
விந்தையுடனேபுத்தில்விளம்பவால்மீகி
விகசிதமுளவட மொழியெனுஞ் சமஸ்க்ருத
விமல ராமாயண மெனுந் தாரகாமிர்த [மந்]

கலைமக ளருளென வருகு முதாரா
கம்பன் சொன்ன கவி பன்னீராயிரம்
கெலி யருணசல கீத விஸ்தாரா
கெர்ச்சிதக்கருணை பக்ஷம் வைத்தருள்வாய்
கீர்த்திசேர் தங்கையா நேர்த்தியாந்தமிழின் [மந்]

---

## 46. சனித்தோடித்தேவே-மெட்டு மகுடம்.

கமாஸ். ஆதி.

பல்லவி.

அருட் பாதந் தருவாய்
அன்பே நிறைந்த [அ]

அநுபல்லவி.

மருட்குணாரக்கதரின் செறுக்கறுபடக்கணை
புரிக் காதல வம ராருகினிதோங்கு முந்தன் [அ]

சரணம்.

அநித்ய ஜெகந்தனைச் சதமென நம்பி
அன்னியமாதர்கண் மேலாசை நிரம்பி
அலைகடற் துரும்பது போன் மனம் வெம்பி

அற்ப ஸ்நேகமதைத் தப்பி வுன் பெருமை
செப்புந் தொண்டனென நற்பேர் பொங்க வருள்

ஆதியந்தமுறை போதமந்திரா
ஜோதி சந்த்ரமுக சீதை சுந்தரா

அண்டாண்ட பகி ரண்ட மாதரனே
கொண்டல் கொண்ட நிறவிண்டுசீதரனே

ஆநந்தக் கிருபைக் கியான நற் பனுவல்
மானுந்தங்கையா சொல் ஞான விற்பனனே

அமலமோன கவு தமனின் மாவுரிமை
அகலிகா சலன மகலப் புரியு முந்தன் [அ]

47. கதிர்காமக் கந்தசாமி-மெட்டு

தேசிகதோடி. ஆதி.

பல்லவி.

ரகு ராமச்சந்திர மூர்த்தி
பதம் நம்பினால் வருஞ்சீர்த்தி [ரகு]

அநுபல்லவி.

நாத சீத ராதயாபர
போத கீத மாதவ ரகு [ரா]

சரணம்.

நேமப்ர தாசச்சுகன்
நித்யாநந் த விவேகன்
சாமள மெய்யன் கமழ்
பூமலர்க் கையன் வேத
சாகர மாகன மாகனி வாகிய
யோகமெஞ் ஞானசு வாக ஜெகாதர
கர்த்தன் ஜீவ காருண்ய
மூத்தன் திகழ்க்
கதிரவன் குல மகிபன் தங்கையா
மதுரத் தமிழ் விச் சித்ரன் [ரகு]

---

திருப்புகளெங்கு-மெட்டு.

பைரவி. ஆதி.

பல்லவி.

திருப்பதந்தா தா வி நோதா சதா (தி)

அநுபல்லவி.

சீரா கெம் பீராவு தாரா சிங் காரத் (தி)

சரணம்.

திருப்பதி வாழ்வோனே தேவர் தொழுங்கோனே
செங்தேன்சி றந்தே நி றைந்தேக மழ்ந்திடுங் (தி)

பக்தர்க்காதரனே பத்தாவதாரனே
பஞ்சாயு தஞ்சார்க ரஞ்சித ரஞ்சிதத் (தி)

ராக்ஷதர் சம்மாரா தீக்ஷண்யனே தீரா
லரபாசல் லாபுரப்ர தாபாஸ்வ ரூபத் (தி)

தாமோதரா பூமா நாமநுதல் ராமா
தங்கையா சங்கீதம் பொங்குஞ் சங்கையனே (தி)

---

## 49. சுஜன ஜீவனு-மெட்டு மகுடம்.

காப்பி. ரூபகம்.

பல்லவி.

கவுரி சோதரா எந்தன்
கவலை தீர் பரா ஞான (க)

அநுபல்லவி.

தவ வசீகரா மானு
பவ சுசீகரா புகழ்

சாமி நாத ராம நாம
க்ஷேம யோக பூம நேம (தவ)

சங்கடந் தவிர்ந் திலங்கும்
மங்களஞ் சிறந்து பொங்கும் (தவ)

தந்திர சுந்திர மந்திர
தந்திமுன் வந்தருள் தந்தவா (தவ)

தருக்கரனே பெருக்கமுயர்
அருட் பரவுந் திருப்பதி வாழ் (தவ)

தருமந்தரு மிங்கிதனே
தருணந்தனில் வந்துதவும் (தவ)

தத்துவா தீத விநோதனே
சத்துவனே ஜெகநாதனே (தவ)

தல மெச்சுகு சேலர்க் கருள்
சலசப்பத கோலப்ரபு (தவ)

தடமடு விடவட மொடு வரு
பட வரவிட முடிதுடி கொள
தச்சந் ததிங்கிணதோமென
மெச்சும்படி நடமிடு பதா (தவ)

தங்குநாமமி லங்கு லோலகி
தா பீதாம்பரா ஞான (க)

சரணம்.

சவுனகாதி முனிஸ்ரேஷ்டர்கள் த்யான பூஜிதா
சகர வம்ஸ பானு கோத்ர தசரத சுதா

தங்க வாம்பரா திரு
நங்கை சீதரா புகழ்
தங்கையா சுவாமி சங்கீதாதர மங்களேஸ்வரா
(ஞான-கவுரி)

50. நொண்டிச்சிந்து.

செஞ்சுருட்டி. ஆதி.

ராமா வெனு மோர் மந்திரம் அந்த
நல்லமந்திரந்தன்னை சொல்லுவாய்நெஞ்சே
பாமர வேட னொருவன் சதா
பானம் புரிந்ததினால் ஞானமடைந்தான் (ரா)

ஜென்ம சாபல்ய மந்திரம் பஞ்ச
தீவினையை விலக்கும் திருமந்திரம்
பொன் மணியான மந்திரம் வேண்டும்
போதந்தனமுதவும் புகழ் மந்திரம் (ரா)

பக்தர் கொண்டாடு மந்திரம் பால
பானுவென விளங்கிப் பகர் மந்திரம்
உத்தமர் போற்று மந்திரம் சிவ
யோக முடிவதனி லுயர் மந்திரம் (ரா)

நானென வோங்கு மந்திரம் தவ
நாத விந் தாதியந்த நடு மந்திரம்
தானே முளைத்த மந்திரம் வேத
சாஸ்திரங்களுக்கெட்டாத்தனிமந்திரம் (ரா)

முத்தொழில் செய்த மந்திரம் துஷ்ட
மும்மலாதியை வென்ற மூல மந்திரம்
சித்திக்கும் கெண்ய மந்திரம் சித்தர்
தேவர் முனிபுங்கவர் தியானமந்திரம் (ரா)

அந்தக் கரண மந்திரம் அதற்
கப்பால் விளங்குவது மந்த மந்திரம்
சொந்த மதான மந்திரம் யாருங்
கண்டா மணிவிளக்காய் தோன்று மந்திரம் (ரா)

அருள் வடிவான மந்திரம் நித்யம்
ஆனந்த பரவச மாக்கு மந்திரம்
குரு வுபதேச மந்திரம் எங்கும்
கோத்திரங் களுக்கெல்லாங் குல மந்திரம் (ரா)

சத்வ சுகுண மந்திரம் மஹாத்
தனிப்பேரொளி விளங்குந் தாரக மந்த்ரம்
தத்வங் கடந்த மந்திரம் எழில்
தங்கையாசுவாமி சொலுந் தமிழ் மந்திரம் (ரா)

---

51. மன்றுளாடியவா-மெட்டு.

தோடி. ரூபகம்.

பல்லவி.

நின்ற நாராயணு சுவாமி (நி)

அநுபல்லவி.

நித்தியமும் போற்றி செய்யும்
உத்தமர்கள் காக்ஷி பெற (நி)

சரணம்.

மன்றல் தங்கி விளங்கிடுஞ் சொர்னம்
மண்டபங்களின் மாமதில் வர்னம்
குன்று மேல் மணிக் கோபுர மின்னும்
கோதில்லாத்திருத் தங்கல் விளங்கும்
கோதையாந் திரு மங்கை மருங்கில் (நி)

ஆழ்வா ராதிகள் போற்றிடும் பாதா
அம்புஜ மலர்க்கண்ணு வி நோதா
நாளும் நின்னைத் தொழ வரந் தாதா

ஞான முற்ற மோன முடிவே
ஞால மேற்பர தான வடிவே (நி)

தாரக மந்த்ர புனித பீதாம்பரா
சாஸ்வத கேசவ நாத தயாபரா
சீரபயோத்தி வாச க்ருபாகரா

செங்கலுழன் மீதிலங்கி
தங்கையா தமிழ்க் கிரங்கி (நி)

---

## 52. தேயிலைத்தோட்டத்திலே-மெட்டுவேறு.

செஞ்சுருட்டி. ரூபகம்.

பல்லவி.

ஞான மணி விளக்கே ஆத்ம
நாத ராம பாத ஜோதியான போத (ஞா)

அநுபல்லவி மகுடம்.

நத்தும் பத்தர் சிந்தை
சத்துச் சித்தா னந்த (ஞா)

ஞாலமடங்கலும் தன்மை வி
சால மிலங்கிடு பொன் மய (ஞா)

நாடும் வாசி நடன முடிவில்
நீடும் வாசல் நடுவில் வடிவாம் (ஞா)

நறுவிகத்தி னேய மற்று
நிருவிகற்ப சாயல் பெற்ற (ஞா)

நானெனுஞ் சொ லின்பமாம் நி
தான வன்பெனுங் கற்பூர (ஞா)

நந்து மும்மலாசை யென்ற
பந்தமே நிறைந்து நின்ற
அந்தகார விருளை நீக்கும்
மந்த்ர பானு யுதயமாக்கும் (ஞா)
சரணம். (பல்லவி யெடுப்பு)
தேனமிர்த கீதமே செப்பும்
சிலன் தங்கையா தமிழ்க்கனுகூலஞ்செய் (ஞா)

---

53. பியாண்ட்—ஆதிபராபர-மெட்டு.
மால்கோஷ். ரூபகம்.
கண்ணிகள்.

தாரக மந்த்ர தயாபரனே யென்முன் வா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா யான்
சந்ததம் போற்றினே னஞ்சேலென் றோதிட
வா வா வா (தா)

பாரிலுள்ளோர் தொழும் பத்மநாபசுவாமி வா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா அதி
பாக்ய மிகுந்த சி லாக்ய சிங்காரனே
வா வா வா (தா)

ஆதியுமந்தமும் ஜோதிமயமானவா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா எழில்
ஆனந்த மோன நி தான மகானுபவே
வா வா வா (தா)

சீத முகில் வர்ன ரூப மகிபனேவா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா கன
திவ்ய முந்நூலணி மார்ப லங்காரனே
வா வா வா (தா)

தத்துவா தீத விநோத விஸ்தாரனே வா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா திசழ்
சத்துச் சித் தாநந்த மூர்த்தி ப்ருந்தாரனே
வா வா வா (தா)

உத்தமர்க் கோதிய ஞான தேசிகனே வா
யென்முன்வா யென்முன்வா யென்முன்வா துதி
ஓங்கிடுந் தங்கையா சுவாமி சங்கீதனே
வா வா வா (தா)

---

54. அமுதமுதேக்கோ—மெட்டு.

பூரிகல்யாணி. ஆதி.

பல்லவி.

திருவரங் கா ஜெய ஸ்ரீபரந்தாமா [தி]

அநுபல்லவி.

ஸ்ரீபரந்தாமா சீதா ராமா [தி]

சரணம்.

அருமையாயோதும் அன்பனென் மீது
அனுக்ரகம் நீபுரிய வேண்டு மிப்போது [தி]

தொகையறு.

சரியை முதல் ஞானநிலை யின்ன தென்றுணர்கின்ற
சன்மார்க்க மறிகிலேனே.

மருள் தருங் கண்ணியரின் வஞ்ச வலையிற் சிக்கு
மான் போலு முழல்கின்றேனே.

ஷ்சரணம்.

வரத விநோதா மாமறை நாதா
மலர்ப்பதந் தந்தி ரக்ஷித்தாண்டருள் போதா (தி)

தொகையரு.

கிரி முறைக்காகக் கராவைக் கடிந்து தற்
காத்த துரை நீயல்லவோ
தரணியில் வாழ்ந்திடுந் தாசானு தாசரின்
தாய் தந்தை நீயல்லவோ

ஷ்சரணம்.

தசரதன் பாலா சாஸ்வத சீலா
தங்கையா சுவாமி சொற் சங்கீதானுகூலா (தி)

---

55. கழுகுமலைக்கு-மெட்டு.

பைரவி. ரூபகம்.

பல்லவி.

ராமச்சந்த்ர ஜெய தாமா நாளும்
நானுன்னை யே நம்பி
னேனென்னை யாண்டருள் (ரா)

அநுபல்லவி.

நாத கீத வேத மோது
பாத நாத கோதி லாத (ரா)

நற்கன விப்ரர்கள் செப்பிடு
சொற்குண ரக்ஷக விற்பன (ரா)

நலத்துரை ரவிப் புகழ்
குலக்கொழுந் தெனத்திகழ் (ரா)

நாரத ன்ந்தர விந்திர
ஞரணனுந் தொழு மந்திர (ரா)
நறுமண மலர் சிரிமடுமிசை
முறையிடு கரி வரத சுமுக (ரா)
நந்தணிகர சுந்தர சுமு
குந்தனே வனு மந்த பூஜித (ரா)

சரணம்.

தேமவி கோசலா தேவியின் பாலா
திவ்ய ப்ரகாச மகத்துவ சீலா
சாமள வர்ன சல்லாப விசாலா
தங்கையா சுவாமி சங் கீதனு கூலா
சாஸ்வத வுரு வே ஜகமிசை
தங்கக் கருடப் புனிதனே
பூசனை புரி தாசர்கண் மனம்
பொங்கச்சுகமுற்றிட வருள் (ரா)

---

## 56. பத்தொன்பதாம்நூற்றுக்கு-மெட்டு.

இந்துஸ்தான் தோடி. ஆதி.

கண்ணிகள்.

ஆயர்பாடிதனிலே அன்புள்ள சோதையிடம்
சேயனென வே வளர்ந்த செல்வ சிகாமணியே
நேயமதாய் நின் பாதம் போற்றிடுவேன்
நித்திய மன் பார் மலரைச் சாற்றிடுவேன் (ஆ)
கஞ்சன் விடுத்து வந்த காதக பூதகியை
~~ சவமுதங் குடித்து மாண்டிடச் செய்தவனே

ரஞ்சித மோன பரி பூரணனே
குஞ்சரந் தன்னைக் காத்த காரணனே (ஆ)

ஓசைக் கடலின் முன்ன முயிர் துறந்த பாலகனை
ஆசான் முன் கொண்டு வந்த ஆநந்த சுந்தரனே

வாசாம கோசர மகத்துவனே
தாசானுகூல சுக சத்துவனே (ஆ)

பஞ்சமா பாவியான கஞ்சன் தனை மடித்தாய்
பஞ்சவர் தூதனாகிப் பாரதப்போர் முடித்தாய்

செஞ்சொன் மிகுந் தங்கையா சங்கிதமே
செப்பினேன் வந்தருள் செய் சந்ததமே (ஆ)

---

## 57. என்னகேள்விமுறை-மெட்டு.

பிலஹரி. ரூபகம்.

பல்லவி.

மந்த்ர நாயகமே எழில்
வாமா மாவாயிர நாமா நாராயண [ம)

அநுபல்லவி.

செந்தேன் பொங்குஞ்சீர்
கொந்தார் திண்புய
மைந்தா சந்தணி திரு (ம)
வந்தனை செய்பவர் சிந்தை கனிந்திட
சுந்தமலரடி தந்தருளை நீயே
வாவா தேவர்பணி
மூவா சீர்மானு
பாவா மாவருள்திரு (ம)

தாமோதரா வுயர் நேம க்ருபாகரா
பூமிசை சந்ததம் க்ஷேம முற வருள்
சுவாமி நீத முறை
நேமி யீஸ்வரனார்
வாமி சோதர திரு (ம)

ஞானப்ர காச ஸ்ரீ மானச வாசா
தீன தயாள நி தான சர்வேசா
நாதா கேசவா வி
நோதா நல்லறிஞர்
போதா பிரபல திரு (ம)

செங்கருடன் மிசை தங்கு விஸ்தாரா
தங்கையா சுவாமி தமிழ்க் கலங்காரா
சீலா ஸ்ரீரங்க
லோலா பேர்மிஞ்சுங்
கோலா கல ஜெய திரு (ம)

---

58. தவபாலகா—மெட்டு.

ஜெயந்தஸ்ரீ ஆதி

பல்லவி.

கருணைநீதே காவா ஸ்ரீ ராமா (க)

அநுபல்லவி.

அருள் செய்ய வாதா அன்பனுன் தகாதா
அம்பொற் பாத மகத்தே நம்பினன் ஜெகநாதா (க)

சரணம்.

காசினியில் தாசர் பூசை மேவுங்கோனே
கற்பூர நெய்வேத்ய வற்புத சீமானே

பாசுர செந்தேனே மாசில்லாக் கோமானே
பச்சை வர்ன வச்சுதனே ரக்ஷக பூமானே (க)

தத்துவங்கடந்த தற்பரா முகுந்தா
சந்தான லக்ஷ்மி சுந்தரா வைகுந்தா
உத்தமர்க்கு மந்த்ர உண்மை மொழிந்தாய்
ஓது சாம கான கீத போதகா நிறைந்த (க)
சங்கு சக்ர கட்க தண்ட மோங்கு கையா
தண் சுகந்த ப்ருந்தை தங்குதார மெய்யா
மங்களேஸ்வரா நின் மஞ்சனுந் தங்கையா
மன்னுஞ் சங்கீத ப்ரபல நன்னய சகாயா (க)

---

## 59. முருகாவருள்புரிவாய்-மெட்டு மகுடம்.

தன்யாசி ஆதி

பல்லவி.

வருவாய் ஜெகநாதா மாவிரைவில் (வ)

அநுபல்லவி.

மாது சீதை மாமணாளா (வ)
மஞ்சஞ் சந்தந் குஞ்சம் ப்ரம்மனே (வ)
மகிழ்ச்சி பெருகிய திகழ்க்கருடன்மிசை (வ)
மருவிலா வரதனே சரதமும் வரந்தர (வ)
வாது நீ செய் யாதிப்போது
கோதில் லாத வேத போதகனே (வ)
மாவலிபால் முன மூவடி மண் கேட்
டரவல் கொள் வாமன தேவதயாநிதி (வ)

சரணம்.

அருமை வேதாந்த முடி வான விசேஷனே
அகிலத்தை யோரடியா யளந்த சர்வேசனே
சரியை கிரியை யோக ஞான விலாசனே
தங்கையா வின் மதுர சங்கீத ப்ரகாசனே
தஞ்சம் தஞ்சம் தஞ்ச மென்றி
ரஞ்சும் மஞ்ச னெந்தன் முன்பு (வ)

60. பாதமதை-மெட்டு.

வசந்தா. ரூபகம்.

பல்லவி.

ஞானமதை யென்னுள் வசந்தா பரவசந்தா [ஞா]

அநுபல்லவி.

ஞாலமீதினிலுந்தன் கோலபதாம்புயத்தை
மேலுந்துதி புரிய நாதனே வா ரவிகுல
நீதனேவா சுகமுறும் போதனேவா நல்லருள்சேர் [ஞா]
பான்மொழிருக்மணியின் பங்கில்வளர்பவனே
பாக்யமிகுங்கோசலை பாலனேவா பீதாம்பர
லோலனே வா ஜெகபரி பாலனேவா ஆன்மசுக [ஞா]
துரோபதைக்காகமுன்னந் துகில்வளரச்செய்தவா
தொங்குங் கவுத்வமணி தூயனேவா செம்பவள
வாயனேவா பஞ்சவர்சகாயனேவா வஸ்துவெனும் [ஞா]
சங்கவர்ணர் புகழுந் தங்கையா சுவாமி சொலும்
சங்கீத நறுமலர்த் தாரனே வா ஜெயவலக்
காரனேவா கோதண்ட தீரனே வா அத்விதமாம் [ஞா]

61. பச்சைமயில்மீதிலேறு.மெட்டு.

பாரீஸ் ப்யாண்ட். ஆதி.

கண்ணிகள்.

அச்சுதனே ஸ்ரீகோவிந்த அபிராமா எனை
அஞ்சலென்றுண்டருள் சுகபூமா
லக்ஷண சீலா ரக்ஷகமேலா
நாடிவுனைப்பணிந்தேன் அலங்காரா வேத
நாயக நாராயண வோங்காரா (அ)

தொகையரு.

பச்சை முகில் வர்னனே வேதவேதாந்த நிறை
பரமார்த்த மவுன குருவே
உச்சித மகிபனே நற்றவ விலாசனே
வுயர்ச்சியாய் நின்றவுருவே

ஷடிகண்ணி

உத்தம ஜானகியின் மணவாளா புகழ்
ஓங்குங் கருணாகரா சுகுணாளா
பத்தாவதாரா நத்துவிஸ்தாரா
பாக்ய வரத ஜெக பரிபாலா வுந்தன்
பாலன்தங்கையா தமிழ்க்கனுகூலா (அ)

---

62. ப்யாண்ட் அாரூர்திரு-மெட்டு.

ப்யாகு. ரூபகம்.

பல்லவி.

வசுதேவனின் சுதனே வருவாயருட்பதனே
மறைதேடிடும்பதனே மணிமந்த்ரவத்விதனே (வ)

அநுபல்லவி.

வரதக் காதல புனிதனே மருளற்றிட வாமுதவுவை
மகிமைக்கடல் விற்பனனே சிற்பர விசாலா
அகிலந்தொழும் ரக்ஷகனே ஆத்மவனுகூலா
அன்பரிதயம் பொங்கும் அற்புதாதிமூலா (வ)

தொகையறு.

மாயாவதாரா கோவிந்த நாராயண மூர்த்தி
தூய நின் தெரிசனக் காக்ஷி கண்டாலல்லோ நேர்த்தி

ஷை பாட்டு சரணம்.

துங்கந் தங்கும் ஞான சங்கந் தங்கும் கியான
சுந்தர நிரந்தர சுதந்திரவிலாசா
சுகிர்தப் பிரபல கந்தச் சொந்தமண வாசா
தொண்டன்தங்கையாசங் கீதப்ரகாசா (வ)

---

63. காக்ஷியாய் விளங்குங்கந்தா-மெட்டு

தேசிகதோடி, ஆதி.

பல்லவி.

மூர்த்தியாய் விளங்குமாதி
மூலமந்திர நற்சோதி
கீர்த்தியாய் நடத்தும் நீதி ஸ்ரீராம (மூ)

அநுபல்லவி.

பூர்த்தியாய் நின்ற நாதா
புண்ய ஜானகி ச மேதா
நேர்த்திசேர் மெஞ்ஞானபோதா
நித்தமகத்தினில் நத்திவன்வேத (மூ)

தொகையறு.

சித்தாந்த முடிவினிடந் திகழ்ந்தோங்கு ரமணா
வித்வானந்தத்திலுறை மேலான நிபுணா

ஷ-பாட்டு.

தெய்வ தயாநிதியே சித்தம் வைப்பாய் ததியே
சைவ பூரண காரண நீயே
தங்கையாசுவாமி தமிழ்க்கருள்வாயே (மூ)

---

64. ஓம்சரவணபவனே-மெட்டு.

சக்ரவாகம். ரூபகம்.

பல்லவி.

மாமரகத வணனே வந்தருள் ரமணியனே [மா]

அநுபல்லவி.

தேமிகு மலர்க் கண்ண னே வுந்தன்
தெரிசனந்தரும் லாவண்ணியனே ... [மா]

சரணம்.

காமக்ரோ தாதியால் பாமரன் போல
காசினியில் நிதம் நேசங் கொண்டேனே
நேம தாரக மந்த்ரானு பூதியின்
நிரூபந் தெரி யேனே
பூமியனைத்தையும் ரக்ஷிக்குந் தெய்வீக
புண்ய ஸ்வ ரூப நற் கோனே
தாமதம் நீ செய்திடா தென்னைக் காத்திடுந்
தாமோத ரா செழுந்தேனே

சாஸ்வதப் பிரபல ஜெய
கேசவ க் கஜ வாதனே
தாசர்கட் கருண் மழை பொழி
கேச மூற்றிடு புனிதனே

தங்கையா சங்கிதமணி
துங்கமிகுஞ் சுந்தரனே
புங்க முறை மங்கள ஸ்ரீ
ரங்கம் வளர் மந்திரனே [மா]

---

## 65. பாங்கானமயிலே-மெட்டு.

ஆநந்தபைரவி. சாப்பு.

பல்லவி.

சங்கு சக்ரா யுதா
தாமோத ரா சதா
தாம ரைப் பதந்தா [ச]

அநுபல்லவி.

தஞ்சமென்றுனை யஞ்சலித்திடும்
மஞ்சனெந்தன் முன் வஞ்சமேன் [ச]

தொகையறு.

தாதார பிருந்தை யணி நாதாவும் நீயே
மாதா பிதா தெய்வ போதகனும் நீயே
ஆதார மேவி நிறை தாதாவும் நீயே
பூதாதி யந்த வத் விதாவும் நீயே

ஷைபாட்டு சரணம் (முடுகு)

அங்கண் ஞால மடங்கலுந் தொழுந்
துங்க பூரண வெங்கடாசல
புங்க மாமறை பொமகு கேசவ
தங்க வம்பர விங்கித [ச]

தொகையறு.

சீர்தரு மலங்கார கஸ்தூரி நாமா
தார் பரவு திண்புயப் புனித ஜெய பூமா
கார்வண சொரூபனே நாமாது மாமா
காரண விநோத மதுசூதன ஸ்ரீராமா

ஷைபாட்டு சரணம் (முடுகு)

சங்கணங் கவி னுங் குணாகர
நங்கை ஜானகி மங்களேஸ்வர
தங்கு நூல் மரு வுங் குணாகர
தங்கையர தமிழ்ச் சங்கித [ச]

---

66. சண்முகாகுகா-மெட்டு.

ஹரிஹரப்ரியா. ஏகம்.

பல்லவி.

வந்து காவையா மந்த்ராதர துளவணிபுய (வ)

அநுபல்லவி.

பந்தபாசத்தால் சிந்தை மேவிடும்
மைந்த னெந்தன் முன் சந்ததம் நிறைந்து (வ)

சரணம்.

கந்தமலர்க் கண்ணு சுந்தரம் நேர் வன்னு
காக்ஷியாக மோங்கு மாக்ஷிமை விற்பன்னு
சந்த்ர மாவத ஜானகி மன்னு
தங்கையாபனுவல் சாற்றுகின்றேனின்னுள் (வ)

---

## 67. வேலுமயில்சேவலுடன்-மெட்டு

சகாணு. ரூபகம்.

பல்லவி.

ஆவலுடன் சேவைசெய்ய
நீவருவாய் அச்சுதனே
பூவின் மிசை கோவியர்கள்
மேவி யணை வுர்ச்சிதனே [ஆ]

அநுபல்லவி.

ஆரணத்துறை பூரணக்ருபை
கார்வணக் கடல் காரண விற்பனனே [ஆ]

அருட் பரவுந் திருப்தி மனம்
விருப்பமதா யிருக்குஞ் சுந்தரனே [ஆ]

ஆதியுமந்தமும் ஜோதியாய் நின்றிடும்
போத முகுந்தனே பாதபங்கயந்தனே [ஆ]

அத்திக்கணி முத்திப்பதம்
நத்திப்புரி வித்வப்பொருளே [ஆ]

சரணம்.

தேவர் முனிவர் பரவுந் திருப்பதியுன் வாசஸ்தலம்
தியானம் செய்த பேர்கட்கெலாஞ் ஜென்ம சாபல்ய நலம்
நாவலன் தங்கையா சொலும் நற்பனுவற் கனுகூலம்
ரக்ஷகனே செய்திடுவாய் பக்ஷமாகவேமென்மேலும் [ஆ]

## 68. ஜெயஜெயகோ-மெட்டு மகுடம்.

பைரவி. ரூபகம்.

பல்லவி.

தசரத பா ல குமாரா
சாஸ்திர பூஜா பல தீரா (த)

அநுபல்லவி.

தசாம வாதார
சாஸ்வத வு தார வீர (த)

சரணம்.

தசமுக ரா வண சங்காரா
சதுர் முகனைத் தரு மோங்காரா
ரச வசன நய சிங்காரா
ராகவா சுக் ஞானந் தாராய்
ராம நாம மோன போத
நேம சாம கான நாத
நத்தி யுனைப் பத்தி செய்ய
வுத்தமனே சித்தருள் செய்

ரகு நந்தன கேசவனே
சுக வன்பருள் வாசவனே

நகை தங்கிய செந்திருமின்
மகிழ் பொங்கிய சுந்திரனே

நாரண மாதவ காரண
வாரண் னேபரி பூரண

நண்பன் தங்கையா சொல்
இன்பந் தங்குஞ் சம்ப்ரம (த)

---

69. இகலைநன நா-மெட்டு.

ஸ்ரீ. ஆதி.

பல்லவி.

ரக்ஷக ஸ்ரீமந் நாராயணனே
ரகுராமச்சந்த்ர ராஜ ப்ரபல (ர)

அநுபல்லவி.

பக்ஷம் வைத்தருள் பரமஸ்வரூபா
பார்த்த சாரத்யனே பாதுகாப்ரதாபா (ர)

சரணம்.

நவ நாயகா ராதா சமேதா
ரமண்ய சகாயா ஸ்ருதி சேவிதா
தவஸ்ரேஷ்டர்களின் மகத்வ விநோதா
தங்கையா சுவாமியின் பனுவற் சங்கீத (ர)

---

## 70. தினமஞ்சிதினமு-மெட்டு.

லத்தாங்கி. ரூபகம்.

பல்லவி.

ரகுவம்ஸ சுகுண
ரக்ஷகா ரக்ஷகா ரக்ஷகா ஸ்ரீராமச்சந்த்ர (ர)

அநுபல்லவீ.

பகை ராக்ஷத சங்கரா
பாக்யந்தருஞ் சிங்காரா (ர)

சரணம்.

அகமீதிலங்கும் ஜோதி ஆன்மஸ்வரூபா
புகழ் வேதாந்த விசால புண்ய வரப்ரதாப (ர)

ஜெப தப வனுஷ்டான தியான வுதாரா
அபய வரத கர அணிமகுட கெம்பீரா (ர)

சவுனகாதியர் போற்றும் சாஸ்வத சீலா
புவிமாதொடு ருக்மணி புனித மங்கள கோல (ர)

அகலிகை சாபந் தீர்த்த அம்புஜப்பாதா
அன்பன் தங்கையாசுவாமி இன்பமிகுஞ்சங்கீதா (ர)

---

## 71. அன்னுதுடனுகானு-மெட்டு.

பைரவிபங்காளா. ஆதி.

பல்லவி.

வந்தாண்டருள் செய் பூமா சந்ததம் (வ)

அநுபல்லவி.

வந்தாண்டருள் புரி மரகத மெய்யனே கா
சிந்தாகு லந்தீர்சு கந்தாநி ரந்தரனே (வ)

சரணம்.

சந்த்ரோதயவதனம் சேர் ஜானகிவ
சந்த வாநந்தனேகண் பார்
சிந்தாமணியெனுஞ்சிந்துரநாமனே சீர்

நந்தாமு குந்தா வை
குந்தாகோ விந்த ராம

நாயகனே நவ நீதவிநோதா
ஞான விலாச தி வாகரபோதா
தூய குணநீதி நாதவ நாதா
துங்கன் தங்கை யாசங்கீதா (வ)

---

72. மோக்ஷமுகலதா–மெட்டு மகுடம்
சாரமதி. ஆதி.

பல்லவி.

தீக்ஷண்ய வரதா ஜெகநாதா வா
திவ்ய ப்ரபு சீதர ஜெய (தீ)

அநுபல்லவி.

காக்ஷி தா சதா காவாத்வீதா
கண்பார் விநோதா சீதரஜெய (தீ)

மகுடம்.

சேவித்துனதிரு மாவற்புத மலர்
தியானித்திடவித மேவித் தயவருள் (தீ)
செப்பிடு நற்பனு வற் பிரகாசனே
நற்புகழுத்தம விற்பனர் நேசனே (தீ)
ஜீவ தயாபர தீன தயாளனே
தேவகுணகர மோனகுணாளனே (தீ)
தேசுலைற மந்திர பூஜித மெய்யா
தாசர் கண் மனமலர் வாசமினை துய்யா (தீ)

சரணம்.

திரிபுவனங் காக்குஞ் சிற்பர நீதி
சித்த சுக் ஞானபனு தீப நற் ஜோதி
திருவருண மேவுந் தியாகராஜனே ஆதி
தெய்வமே தங்கையா சொற் கியாதி
சீதர ஜெய (தீ)

---

ஸ்ரீராம சங்க்ரகம்.

73. ஆண்டிப்பண்டாரம்—மெட்டு.

சுருட்டி. ஆதி.

பல்லவி.

ராமாவ தாரா பரந்
தாமா வதாரா வந்தருள் (ரா)

அநுபல்லவி.

காமாதியர்க்கெட்டாத கார்வண்ண நாரணனே
தேமவியுங் கோசலா தேவி பாலனாக வந்த (ரா)

மாசுமிகுந் தாடகையை மாண்டிடவோர் பாணந்
[தொட்டு
கோசிகன் யாகமதை லேசாகவே முடித்த (ரா)

சொல்லு மறைமுடிவில் தோன்றுந் தயாநிதியே
கல்லைப்பெண்ணாகச்செய்துகாக்ஷிதந்திலங்கும்பாத (ரா)

சங்குசக்ராதரனே ஸ்யாமளக்ருபாகரனே
மங்கை ஜானகி மகிழ் மன்னவனாக வந்த (ரா)

நிறையான வாழ்வு தரும் நித்ய சுகாதரனே
மறையோன் கர்வமடக்கும் வண்மைக்கோதண்ட
[பாணி (ரா)

மாதாவெனுங் கைகேசி வார்த்தை சிரமேற்
[கொண்டு
சீதாலெக்ஷ்மணனோடு திவய வனம் புகுந்த (ரா)

ஆதாரமில்லையென்ற அனுஜன் பரதனுக்கு
பாதவடி கொடுத்துப் பாராளச் செய்துவைத்த (ரா)

அண்டர்முனிவர்களே அஞ்சாதீரென்றுசொல்லி
தண்டகாரணியஞ்சென்ற சாதுகேசவா முகுந்த (ரா)

தீனதயாபரனே சித்தாந்த மெய்ப்பொருளே
மானுரு வெடுத்து வந்த மாரீசனை மடித்த (ரா)

தஞ்சமென்றடி பணிந்த தாசனனுமனையே
சஞ்சீவியாகச் செய்த சல்லாபனே விநோத (ரா)

துஷ்ட வாலியை வதைத்து சுக்ரீவனைக் காத்து
கிஷ்கிந்தைமாநகரை தெண்யபட்டங்கட்டிவைத்த (ரா)

ஆவல் விபீஷணருக் கபயஸ்தமுங் கொடுத்து
ராவண கும்பகர்ணனை நாடி ஜெயித்ததிட (ரா)

சீதா லட்மணனோடு சேதுவில் தீர்த்தமாடி
கோதில்லா தோங்குஞ் சொந்த கோசலா தேசம்
[வந்த (ரா)

தேவர் புவியோர் கொண்டாட திவ்ய மகுட
[மணிந்தாய்
நாவலன்தங்கையா சொல் நண்ணுஞ்சங்கீதபோத (ரா)

74. திருச்செந்தூர்வாசா-மெட்டு.

பைரவி. ரூபகம்.

பல்லவி.

ரகு ராமா வுன்னை நம்பினேன் கண்பாரய்யா
நளின கருணை நயன துய்யா [ரா]

அநுபல்லவி.

நேம தாரக நாம மந்திர
நிச ரஸ வசனசு பகரனே
திசைபெரு கிஜெய பிரபல [ரா]

சரணம்.

கலமிகு ரவி குல தசரத
சுதனெனவரு பவகௌசிகன்
பலனடைவுற வுயர் சிலைகனி
யெனவருள்புரி பதமிதிலையில்
நிலைதெரிவுற சிலைதனையொரு
நொடிதனிலொடி படவதிகமழ்
மலரணிகுழ லழகிய திரு
மகளுடனணி மணவறைதனில்

வாத்ய மேவ வன்ன மங்கள விநோதா
நேர்த்தி யாக நன்மணம் புரிந்த நாதா

மணிரதமிசை வருவழிதனில்
மறையவனென வருபராசுரா

மனைவிறைவினில் வலமைகளற
வளைசிலைநிகழ் காரமணிய

வணமவிநகர் தனிலனைமொழி
மதுரிதமென மாவுரியொடு

வனமிசைஜன கியுமனுஜனு
மருகினில்வா நதியுறுகுகன்

மரக்கலம் நடத்திட மனத்தினில் மகிழ்ந்தவா
மருட்பர தனுக்குநல் லருட்பல முகந்தவா

மதமருவிய திடகரதுச
ணனுமறையுமா ரிசனதிபல

விதசுகிர்தவா வியுமவுணரு
மிகவரசுள தசமுகவனுஞ்

சிதைவுறவய மலரணிபுய
திருவுடனனு ஜனுநகர்தனில்

மதிநிறைவழி மகநெடுமுனி
வரரமரு நிதந்துதிகொள

மகுட மணியு மகிப வடிவே
சுகுண புனித சகித முடிவே

மங்கள வஸ்துவே வுத்தமன்
தங்கையா நத்திடும் வித்தக [ரா]

75. கல்யாணஞ்செய்து-மெட்டு வேறு.

மத்யமாவதி. ஆதி.

பல்லவி.

ராமச்சந்திரற்கு மங்களம் சீதா கல்யாண (ரா)

அநுபல்லவி.

நட்பொடு மாருதி பூஜித பாதன்
விற்பன செங்கரு டாதிபனும் ஸ்ரீ (ரா)

சரணம்.

வாமியிடப் பாகனுக்கும் வாணிமகிழ் மோகனுக்கும்
மாமுககணேசனுக்கும் வள்ளி தெய்வானை வேலற்கும்
வாசவனுட்டுறை யண்டர்களுக்கும்
வந்தனம்புரிந்திடுந் தொண்டர்களுக்கும்
தாசர்கண்நேச மிகுந்திடுசீலன்
தங்கையா சங்கீத னுகூல (ரா)

முற்றிற்று.

விளம்பரம்.

இக் கீர்த்தனப்புத்தகத்தின் பிரதிகள், பலவித தமிழ்ப்புத்தகங்கள், படங்கள், புடவைகள். மருந்துகள், தைலங்கள், முதலியன எம்மிடம் குறைந்தவிலைக்குக் கிடைக்கும்.

B. A. சுப்பாராயரெட்டியார் & கோ
நீர் 52. செட்டித்தெரு, கொழும்பு.

## கம்மபாலன் புக்டிபோ,

### கவனியுங்கள்.

1 வர்த்தகர் நேசன்:—256 பக்கங்களில், கிளேஸ் கடிதத்தில், நேர்த்தியான பைண்டுடன் வெளியிடப்பட்டிருக்கிறது தமிழ் மாத்திரம் கற்றுக்கொண்ட வியாபாரிகள், வியாபார உலகத்தில் சாதாரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய ஆங்கிலப் பாடங்கள் காணப்படுகின்றன வர்த்தகர்களறிய வேண்டிய தந்தி, தபால், தொழில் முறை, கோர்ட்டு நடவடிக்கைகள், ஸ்டாம்பு, ரிஜிஸ்டிரேஷன், இன்கம்டாக்ஸ், ரெயில்வே டிபார்ட்மெண்டு முதலிய நடபடிக்கைகள் யாவும் தெளிவாய் தொகுக்கப் பட்டிருப்பதால் பெயர் மாத்திரத்திலன்றி, உண்மையில் இப்புத்தகம் வியாபாரிகளின் உண்மை நண்பனென்றே கூறலாம்.

**விலை ரூபாய் 1-4-0. தபாற்கூலி வேறு.**

2. தெலுங்கு, தமிழ் வித்தியா மாலிகை முதல் வாசகம் தெலுங்கு பாஷையை உபாத்தியாயரின்றிக் கற்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது மிகுந்த பயனைத்தருமென்று நம்புகிறோம்.

**விலை 6 அணா. தபாற்கூலி வேறு.**

3. ஆங்கிலத் தெலுங்கு வித்யாமாலிகை முதல்வாசகம்:—

தெலுங்கு பாஷை தெரிந்தவர் ஆங்கில பாஷையைக் கற்க விரும்பினால் இப்புத்தகம் வாங்கத் தகுந்ததாகும்.

**விலை 6 அணா. தபாற்கூலி வேறு.**

**இங்கிலீஷ்காபி புஸ்தகம் விலை 3 அணா**

**திருத்தங்கல், சிவகாசி S. I. R.**

கம்மபாலன் புக் டிபோ,

## அகநானூறு.

எட்டுத்தொகை நூலுள் ஒன்றாகிய இது பழைய உரையுடனும் ஸ்ரீவத்ஸ சக்கரவர்த்தி ராஜகோபால ராயன் எழுதிய விரிவுரையுடனும் சிறந்து விளங்குகின்றது. சங்க காலத்துத் தமிழ் மக்களின் கொடை, வீரம், கல்வி, இல்லறவியல் முதலியவற்றை அறிவிக்கும் பல ஆராய்ச்சிக் குறிப்புகளையும், ஒருநூற்று நாற்பத்தைந்து புலவர் முதலியோரின் சரித்திரக் குறிப்புகளையும் அடக்கியுள்ளது சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமானது. கிராமப் பஞ்சாயத்துதலைவர்களுக்குகந்ததென சென்னை கிராமப் பஞ்சாயத்து ரிஜிஸ்தரார் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப் பெற்றது

முதற் பகுதி விலை ரூ. 4—0—0

---

## நாலடியார்.

With copious notes and exhaustive index.

திருக்குறளோடொப்பச் சிறப்பித்துச் சான்றோரால் கொண்டாடப் பெற்றதான இந்நூல் இதுவரை வெளிவராத பரிப்பெருமாள், பதுமனார் என்ற பழைய உரையாசிரியர்களின் கருத்தை அமைத்து எழுதிய புத்துரையோடும் நிரம்பிய அரும்பத அகராதியோடும் நூலாராய்ச்சி, காலவாராய்ச்சி முதலான பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளோடும் சிறந்து விளங்குவது.

காலிகோ பைண்டு விலை ரூ. 1—8—0

திருத்தங்கள், சிவகாசி S. I. R

# கம்மபாலன் புக்டிபோ.

## சங்கசிந்தாமணி.

இது தலை யிடை கடை எனப்படும் சங்கங்கள் மூன்றிலும் வழங்கிய நூல்களால் அறியக்கிடந்த பண்டைத் தமிழர் சரிதையினையும், அவர் ஒழுகலாற்றினையும், வட ஆரியர்களோடும், எகிப்தியர், கிரேக்கர் முதலியோர்களோடும் அவர்களுக் குண்டாயிருந்த தொடர்பினையும் பிறவற்றையும் விளங்கக் கூறும் நூல். இந்நூல் பண்டைத் தமிழ் நூல்களைக் கற்பார்க்கும் சரித்திரச்செய்திகள் தேடுவோர்க்கும் மிகவும்உபயோகமானது. கிராமப்பஞ்சாயத்து லைப்ரெரிகளுக்கு அவசியமானது.

**காலிகோ பைண்டு விலை ரூ. 1—0—0**

## நான்மணிக்கடிகை.

கீழ்க்கணக்கு நூல் பதினெட்டினுள் ஒன்றாகிய இது நானூற்றுக்கு மேற்கொண்ட நீதிகளையுடையதாய்க் கற்போர் மனதைக் கவருமாறு இழுமென் சொல்லானியன்று விழுமியது பயக்கும் அறியதொரு நூலென்று கற்றோர் அறிவர். இந்நூற்பதிப்பு அந்நானூற்றுக்கு மேற்கொண்ட நீதிகளையும் அகராதி வரிசைப்படுத்தும், பழைய வுரையோடும் விசேஷக் குறிப்புகளோடும், அரு[illegible] பத அகராதியோடும் திருத்தமுறப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. கெட்டியான அட்டை பைண்டு செய்தது.

விலை அணா 6.

## அன்புவல்லி

கற்புடைப் பெண் அமிழ்து. ஸ்ரீ, வே இராஜகோபாலையங்கார் எழுதியது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணா 6.

திருத்தங்கல். சிவகாசி S. I. R.

# பாலன் புக் டிபோ,

# கதைக்கொடி.

Approved by the Text-Book Committee.

இக்கொடி இளைஞர் மனத்தைக் கவரத்தக்க இனிய கதைகளாகிய இதழ்கள் பல விரிந்த மலர்களைப் பூத்து, அவர்களுக்கு அறிவையூட்டியும், நல்லொழுக்கத்தைக் காட்டியும், பாவனா கற்பனா சக்திகளை விரித்தும், பெற்றோர், குரு, தெய்வம் முதலியோரிடத்துப் பக்தியைப் பதித்தும் ஓர் உற்ற துணையாய் மறுவுயது இது துரைத்தனத்தாராலும், ஜில்லா கல்வி அதிகாரிகளாலும் சிறுவர்களுக்குப் பயன்படத் தக்கதென அங்கீகரிக்கப் பெற்றுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் மலர்— | இதழ் | I | சண்பகமொட்டு | ரூ 0—2—6 |
| ஷை | ஷை | II | தங்கக்கிளி | 0—3—6 |
| ஷை | ஷை | III | பொன் ஆடு | 0—3—6 |
| இரண்டாம்மலர் | ஷை | I | மந்திரமணி | 0—3—6 |
| ஷை | ஷை | II | தங்கமோதிரம் | 0—3—6 |
| ஷை | ஷை | III | மாம்பழமங்கை | 0—3—6 |

# உதங்கர் சரிதம்.

Approved by the Text-Book committee.

இம்மகரிஷியினுடைய சரிதம் சிறுவர் சிறுமியர்கள் எளிதிற் கற்றுணருமாறு இனிய நடையில் இயன்று படிப்போர்க்குத் தர்மார்த்த காமங்களைத் தந்தும், தெய்வ பக்தியைப் போதித்தும் சிறந்து விளங்குகின்றது. களவு பெரியோரைப் பிழைத்தல், வஞ்சனை முதலாயின தீப்பயனை விளைக்குமென்பதையும், குருபக்தி, அடக்கம், முதலாயின நற்பயனை விளைக்குமென்பதையும் இச்சரிதம் நன்கு தெரிவிப்ப தொன்றாகும்.

விலை அணா 4.

திருத்தங்கல், சிவகாசி S. I. R.

# பாலன் புக்டிபோ,

## கிராமப் பஞ்சாயத்துகள்.

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| வரவு செலவு குறிப்பு ... ... ... ... | 1 | 12 | 0 |
| தீர்மானப் புஸ்தகம் ... ... ... ... | 1 | 4 | 0 |
| வரி விதிப்புப் புஸ்தகம் ... ... ... ... | 1 | 0 | 0 |
| ரசீது புஸ்தகம் 100ஷீட் பாங்க் பேப்பர் ... | 0 | 10 | 0 |
| வவுச்சர் புக் 100ஷீட் ... ... ... ... | 0 | 6 | 0 |
| வரவு கடித ரிஜிஸ்தர் ... ... ... ... | 0 | 6 | 0 |
| அனுப்பு கடித ரிஜிஸ்தர் ... ... ... ... | 0 | 6 | 0 |
| புறம்போக்கு ஜாப்தா பாரம் டஜன் ... ... | 0 | 3 | 6 |
| விளம்பர பாரம டஜன் ... ... | 0 | 2 | 6 |
| தீர்மான நகல் பெரிது டஜன் ... ... | 0 | 2 | 6 |
| ஷை சிறிது டஜன் ... ... | 0 | 2 | 0 |
| 1 நிர். நமூனு(டிமாண்டு) டஜன் ... ... | 0 | 2 | 0 |
| 2 நிர். நமூனு(ஜப்தி) டஜன் ... ... | 0 | 2 | 0 |
| மீட்டிங் நோட்டீஸ் டஜன் ... ... | 0 | 2 | 0 |
| வரியுடன் அனுப்பும் ரிப்போர்ட்டு டஜன் | 0 | 2 | 0 |
| சாமான் இருப்பு ரிஜிஸ்தர் ... ... ... | 0 | 6 | 0 |
| புத்தகசாலை இருப்பு ரிஜிஸ்தர் ... ... | 0 | 6 | 0 |
| புத்தகசாலை கொடுப்பு ரிஜிஸ்டர் ... ... | 0 | 6 | 0 |
| பாடசாலை அட்மிஷன் புக் ... ... ... | 0 | 4 | 0 |
| ஷை அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் ... | 0 | 3 | 0 |
| பரீக்ஷைக்குறிப்புப் புஸ்தகம்(Inspection) | 0 | 6 | 0 |
| பார்வைக்குறிப்புப் புஸ்தகம்[Visitors' Book] | 0 | 6 | 0 |
| எழுத்து அட்டை தமிழ் டஜன் ... | 0 | 6 | 0 |
| ஷை இங்கிலீஷ் டஜன் ... | 0 | 6 | 0 |
| பைல் புஸ்தம் ... ... ... ... ... | 0 | 12 | 0 |
| கிராமப் பஞ்சாயத்து சோர்ட் ஆக்ட் புஸ்தகம் | 1 | 0 | 0 |

**திருத்தங்கல், சிவகாசி S. I. R.**